ஞானசம்பந்தம்

மலர் 12] விஜய௵ சித்திரை௴ 10—5—53 [இதழ் 6

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிகோயில் பிரமோற்சவம்

பெருமான் திருத்தேரில் பவனி வருகிறுர்.

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர்.
தருமபுர ஆதீன

உ

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை விழா

ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் கோயில் உற்சவம்

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வரஸ்வாமிக்கு நிகழும் விஜயஸ்ரீ வைகாசிமீ 12உ முதல் (25—5—53) பத்து நாட்களும் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

3—6—53 அன்று ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை விழாவும், மறுநாள் மாகேஸ்வர பூஜை பட்டணப் பிரவேசம் ஆகியனவும் நிகழும்.

வழக்கம்போல் பத்து நாட்களிலும் திரு நெறிய தெய்வத்தமிழ் மாநாடு நடைபெறும். பல பேரறிஞர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் குருபூஜை

தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 22—5—53 வெள்ளிக்கிழமை தருமபுர ஆதீனத்திலுள்ள அவர்கள் குருமூர்த்தத்தின் முன்பு நிகழும், அறிஞர்கள் பலர் காலையிலும் மாலையிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். இரவு இன்னிசையரங்கும் நடைபெறும்.

262

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 12] விஜயஸ்ரீ சித்திரைமீ 10—5—53. [இதழ் 6

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

பழையதுதான் புதியது!

இலையுதிர்காலத்து வற்றி யுலர்ந்து உதிர்ந்த சருகு உக்கி மக்கி எருவாகி மரத்தொடு சேர்ந்து மறுபடியும் தளிராகித் தழையாகின்றன. ஆவியாகி ஆகாயத்தை அடைந்த நீர் மீட்டும் நீராகி மண்ணையடைகின்றது. நாகரீகமும் பழைய முறையெல்லாம் புதிதாகிப் போற்றப்படுகின்றன. அது போலவே நமது பண்பாடுகளும். பரம்பரையையொட்டியே பண்பாடுகளும், பழக்கவழக்கங்களும் நடையுடைபாவனைகளும் அமைகின்றன. தந்தையை ஒட்டியே மகனுடைய குணம் நடையெல்லாம் அமைகின்றன. வள்ளுவர் சொன்னார்; மனிதன் தகுதியை அவன் மகனைக்கொண்டு அறியலாம் என்று. தாயைப்போல மகள். 'நூலைப்போலச் சீலை' 'விதையொன்று போடச் சுரையொன்று முளையாது' என்பன பழமொழிகள். இவற்றையெல்லாம் நாம் உற்றுநோக்கும்போது புதிது என்று ஒன்றும் இல்லை. பழையதுதான் புதிதாகப் போர்வைபோர்த்து அறிவை மயக்கி அழகாகக் காட்டிவருகிறது. பழையதாகின்றது பழுத்துவீழ்கின்றது. மறைந்துபோகின்றது சகடக்கால்போலத் திரும்பியும் வருகிறது.

பழைய ஒன்றை இளைஞர்கள் முயற்சியால் எய்துவராயின் அவர்கள் தங்கள் புதுமையைத் தாம் கண்ட பொருள்மேல்

ஏற்றி இது புதுமை, புதிய கருத்து என்கின்றனர் இது பொருந்துமா யோசியுங்கள்! இல்லாத ஒன்று பிறக்குமா? அள்ளாத ஒன்று குறையுமா? அதுபோல, புதுமையெல்லாம் ஏற்கனவே உள்ள பழமைதான்.

இந்தக்கருத்தை மனத்தில் நன்கு நாடிப் பதியவைத்தோமாயின், 'மத சம்பிரதாயங்கள் பழமையானவை; காலத்திற்கு ஏற்றவையல்ல' என்பதைச் சொல்லமாட்டோம். நம்மால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படும் புதுமைகள் நமக்குப் பின்வரும் நம் சிறுவர்களால் பழமை என்று ஒதுக்கித் தள்ளப்படும். உறுதி இப்படியேபோனுல் புதிது, புதிதாகத் தோன்றிக்கொண்டே போகிறதா என்று பார்க்கவேண்டும். இல்லை. சுமார் 50 ஆண்டுகளுக்குமுன் வழங்கியிருந்த சிமிக்கியென்னும் காதணி பழைமையாயிற்று. இன்று புதுமை பெற்றுவிட்டது. குறுக்குக்கோட்டு ஆடைகள் அன்று பழமையாயின. இன்று நாகரிகத்தின் சிகரமாகப் புதுமை பெற்றுவிட்டன. அதுபோலவே நாம் அவ்வப்போது அனுஷ்டிக்கும் மதச் சடங்குகளும் அவற்றின் அடிப்படைத் தத்துவந் தெரியாதவர்களால்—அறிந்துகொள்ளும் முயற்சி யெடுக்காமலேயே பழமை என்று ஒதுக்கப்பெறுகின்றன. எதனையும் ஊன்றிப்பார்த்து நம் நம் அறிவிற்கும் ஒரு எல்லையுண்டு என்பதை எண்ணி அமைதல் அறிவுடைமையாகும். இத்தகைய அறிவுடைய மக்களையே பெரியோர் 'ஆன்று அவிந்து அடங்கிய அறிவன்' எனப் போற்றுவார் ஆயினர்.

அடக்கந்தான் அறிவின் அறிகுறி. எல்லாவற்றிலும் நான் நான் என்று தன்னறிவின் தகுதியை யறியாமலே எவன் ஒருவன் வேலையை வேண்டிப் பெறுகிருனே அவன் அதற்குத் தகுதியற்றவன். எவன் ஒருவன் கொடுத்தவேலையைக் காலமறிந்து இடமறிந்து முடிக்கிருனே அவன் தகுதியுடையவன். இத்தகைய தகுதியுடையார் எவரும் எதனையும் புதுமையென்று போற்ருர் எதனையும் பழமை என்று தள்ளார். இரண்டிலும் ஒற்றுமைகண்டு என்றும் ஒருபடித்தாக இருப்பர். இப்படி என்றும் மாற்றமில்லாது இருந்ததே மதம். அதனுலே என்றும் மாற்றமில்லாத, புதுமை பழைமையென்று வரையறுக்க முடியாத வெள்ளைநிறம் (விபூதி முதலியன) சமயச்சின்னமாகப் போற்றப்படுகின்றன. பழைமையே புதுமை.

ஆண்டவன் நடத்தும் நாடகம்

(கனம் ராஜாஜி)

ஆண்டவன் உலகமெனும் நாடகத்தை விநோதமாக நடத்துகின்றார். நவாப் ராஜமாணிக்கம் போன்றவர்களும் தான் நாம் கண்ணால்காணும் நாடகத்தை நடத்துகின்றார்கள். உலகிலும் சரி, கம்பெனியிலும் சரி நாடகம் நடத்துகிறவன் பின்னால் இருக்கின்றனர். ஆனால் எல்லாம் செய்வது அவனே. நம்மையெல்லாம் ஆண்டவன் ஸூத்ரதாரனாக இருந்து நடத்துகின்றார் இவ்விதம் நடத்துவதில் பாருங்கள் ஆண்டவனின் நாடகத்தில் ஓரே ஏற்பாடு பசி. பசியை ஏற்படுத்தினாரே தவிர ஆண்டவன், அவராக நம்மைச் சாப்பிடச் சொல்கிறார் இல்லை. பசிக்கு நாமே சாப்பிடுகிறோம். அப்படிச் சாப்பிடுவதால் நாம் வளர்கிறோம். ... ... வியாதியிலோ எப்படியோ ஒருநாள் சாக வேண்டியதுதான். எந்தவிதமோ ஆண்டவனின் நியதியில் சாகவேண்டியதும் புதியதாகப் பிறக்கவேண்டியது நியமமாகும். இப்படி ஏற்பட்ட நாடகம் நடந்துகொண்டே போகிறது. ஆடு இருக்கிறதே அது புல் தின்கிறது. நாம் அந்த புல்லைத் தின்ன முடியாது. புல்லைத் தின்னும் ஆட்டை நம்முள் சிலர் தின்று விடுவார்கள். தன்னைச் சாப்பிடுபவர்கள் வர்க்கத்திற்கு ஆடு குளிர் காலத்தில் கம்பளி தரவில்லையா? இப்படி எல்லாம் ஆண்டவன் ஒன்றிற்கு ஒன்று உதவியே இருப்பது இந்த உலகத்தில் உபயோகமில்லாத பொருள் என்று ஒன்றுமில்லை. மலமும் மண்ணாகி பிறகு வெளியேகிளம்புகின்றது. இப்படியே ஆண்டவனேற்பாட்டில் அழுக்கு சுத்தமாகிப் பொருளாகின்றது. இவ்வளவும் நியதியில் தானாகவே நடக்கின்றது. ஆண்டவன் பட்டினியில் எல்லா எருவும் உபயோகமாகின்றது இப்படித் தாங்களே எருவைத் தயாரிக்காது பணம்கொடுத்து சர்க்காரிடம் வாங்குகிறார்கள். நம் அழுக்கே நமக்குத்தேவையான எரு. இதை நாம் கவனிக்காது பணம் செலவு செய்கிறோம். நல்ல பூமியில் நல்ல எருவிட்டு காய் கறி வகைகள் அதிகம் வளரவேண்டும். —சுதேசமித்திரன் 5-5—53.

வன்மைபுரி காயம் மரப்பாவைதன்னை அரன்
கன்மமெனும் சூத்திரத்தால் கட்டியே—நன்மை தின்மை
ஆட்டுவது நாடாது அறிவிலார் தம்செயலாய்
நாட்டுதல்போல் உண்டோ நகை. —குருஞானசம்பந்தர்.

265

கம்பர் கவிச்சுவை.

[ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுளத்திலெழுந்த இந்த இலக்கியச் சுவை அன்பர்கட்கு விருந்தாகும்.]

கம்பர் கவிச்சக்கிரவர்த்தியாதலை அறிஞர் எல்லோரும் அறிவர். சக்கிரவர்த்திக்கு எல்லாவுரிமையும் உண்டு. எதையும் எவ்வாறும் சொல்லவும் செய்யவும் இயலும். உலக சக்கிரவர்த்தி எதைச்சொன்னாலும் செய்தாலும் தனக்கும் தன்படை முதலியவற்றிற்கும் நாட்டிற்கும் கேடுண்டாகாதவாறு போற்றிக்கொள்ளல்வேண்டும். அவ்வாறின்றிச் சொல்வதும் செய்வதும் நேரும். கவிச்சக்கிரவர்த்தி அவ்வாறு கேடுண்டாகவோ உண்டாக்கிக்கொள்ளவோ சொல்லலும் செய்யலும் இல்லை. இருப்பின் அவர் கவிச்சக்கிரவர்த்தி ஆகார்.

கம்பர் ஒருவரே கவிச்சக்கிரவர்த்தி என்னும் புகழ்ப் பெயர்க்குரியவர். கலிங்கத்துப்பரணி பாடிய சயங்கொண்டார்க்கும் அப்பெயர் உண்டு. அப்பரணி கம்பராமாயணம் போலப் பாரகாவியம் அன்று.

கம்பர் தாம் சக்கிரவர்த்தியாகித் திகழ்வதால், எதையும் முன்னோர் சொல்லிய முறைக்கு மாறாகச் சொல்லி, எல்லாக் கவிஞரும் இசையச் செய்துள்ள திறம் யாவரும் அறியத்தக்கது. கவிச்சக்கிரவர்த்தியின் சர்வாதிகாரித்வம் கம்பராமாயணத்தில் எழுத்து, சொல், பொருள் ஆகிய எல்லாவற்றிலும் அமைந்துளது.

சந்திர + உதயம் என்றவற்றின் சேர்க்கை, சந்திரோதயம் என்று இருத்தல்வேண்டுமென்பது வடமொழிப்புலவர் எல்லோரும் அறிவர். "சாளரந்தோறும் தோன்றும் **சந்திர வுதயங்** கண்டார்" என்று தமிழ்மொழிக்குரிய விதிப்படி உடம்படுமெய்வரச்சேர்த்தார். அன்பு என்னும் பெயர் நான்கனுருபு ஏற்குங்கால் அன்பிற்கு, அன்புக்கு அன்பினுக்கு என்று

நிற்கும். அத்துச்சாரியை தனது அத்துமீறி அங்குநில்லாது எப்போதும் அத்துமீறினல் அனர்த்தம் உண்டாகும். 'மடத்துப் புலவர்' அத்துமீறினல் மடப்புலவராவதில் ஐயமில்லே. "அன்பத்துக் கெல்லேயுண்டே அழகிதென் அடிமை என்றுன்" என்பதில், கம்பர் வாக்கில் அத்துமீறிவந்து நின்றும், புலவர் பலரும் மீறவில்லே என்றே இசைந்து போற்றுகின்றனர்.

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்"

என்ற திருவள்ளுவர் வாக்கிலுள்ளவாறே கம்பர் வாக்கிலும்,

"முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு மீன்றுனை
முன்னீன் றுனைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறத்தலாற் றுறந்த
பெரியாள் என்றுன்"

என்றதில் ஓரெழுத்து, தொன்னெறிக்கு மாருய்த் தோன்றியிருக்கின்றது. மையல் - மயல் பையல் - பயல் என்பவை புலவர்க்கு விளங்கும். மயல் என்பது மசல் என்றுயிற்று. மசல் என்பது ரதம் என்பதொடு சேர்ந்தது. மசரதம் என்று நின்றது; பேய்த்தேர் என்னும் பொருளேக் கொடுக்கின்றது. அதனே,

"மசரதம் அனேயவர் வரமும் வாழ்வும்ஓர்
நிசரத கணேகளால் நீறுசெய்ய யாம்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலேயா வருதும் தாரணி"

என்ற செய்யுளிற் காண்க.

கொல்லாமையை நன்னெறி என்றும், கொலேயைத் தீநெறி என்றும் எல்லாரும் இசைவர். பாணங்கள் கொல்லும் நெறியைச் சார்ந்தவை. கொல்லாமையாகிய நன்னெறிக்குப் பாணங்கள் வேண்டுவனவாகா. அம்புகள்தாம் கொல்லும் நெறிக்கு மாருனல் அவற்றுல் பயன் இல்லே. கவிச்சக்கிரவர்த்தியோ அம்புகளும் நெறிக்குமாருகாமலே நின்று நன்மை செய்கின்றன என்று நிலேநாட்டுகின்றுர்.

"ஆசலம்புரி ஐம்பொறி வாளியும்
காசலம்பு முலையவர் கண் ணெனும்
பூசலம்பும் நெறியின் புறஞ் செலாக்
கோசலம் புனை யாற்றணி கூறுவாம்''

என்பதிற்கூறிய அம்பின் நலத்தை அறியவேண்டும்.

மலையின் உயர்வும் கடலின் ஆழமும் மேலுக்கும் கீழுக்கும் வரம்பாகச் சொல்லப்படும். படினும், கம்பர்க்கு மலை உயர்வினும் கடலின் ஆழம் எவ்வாறு தோன்றுகின்றது பாருங்கள்!

மேகம் மலையின் உச்சிக்கு நேரே வானில்நின்று மழையைப் பொழிகின்றது. அத்தோற்றம், கடலே மலைக்குமேல் உயர்ந்து கவிந்தகாட்சியாயிற்று. ஆக்கம் ஒரு காரணத்தைக் கொண்டிருக்கும் என்பது இலக்கணம். சூரியவெப்பத்தால், சிவபிரானுக்கு மாதுலனான இமாசலராசன் தண்மையற்றிருக்கின்றான். அவ்வெம்மை தீரவும் தண்மை சேரவும் நாம் நீராட்டுவோம் என்று கடலே மலையின்மேலேறிக் கவிந்ததாம்.

"பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்
அம்பின் ஆட்டுதும் என்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி எழுந்தது போன்றதே''

புலவர் எல்லோரும் கொடையாளர்க்கு ஒப்பாக மேகத்தைச் சொல்வதுண்டு. மேகத்துக்கு ஒப்பாக எதையும் எவரும் சொல்லியதில்லை. கம்பரோ கவிச்சக்கிரவர்த்தியாதலால், கொடையாளரைப்போல மேகம் மழையை வழங்கிற்று என்றார். மேகம்போல வழங்கினர் வள்ளியோர் என்பது பழமையுற்ற முறை. அம்முறைக்குமாறாக வள்ளியோர்போல மேகம் வழங்கிற்று என்று சொல்லி எவரையும் இசைவித்த திறம் கவிச்சக்கிரவர்த்திக்கே தக்கது.

"புள்ளி மால்வரை பொன்னெனல் நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி உள்ளஎல் லாம்உவந் தீயும்அவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே.''

268

எல்லாப்புலவரும் வேந்தனை உயிராகவும், அவன் குடிமக்களை உடம்பாகவும் உரைத்தனர்.

> "யானுயிர் என்பது அறிகை
> வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே"

என்றார் பழம்புலவருள் ஒருவர்.

> "மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
> கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்"

> "மன்னரை இன்றி வாழும் மண்ணுலகெண்ணுங் காலை
> இன்னுயிர் இன்றி வாழும் யாக்கையை ஒக்கும் என்பார்"

என்று அருளினார் சேக்கிழார்பெருமானார்.

கம்பர் கவிச்சக்கிரவர்த்தியாதலின், மாற்றிச்சொல்லும் உரிமை உடையவராகித் தசரதமன்னன் அரசியல் சிறப்பு உணர்த்தும் இடத்தில்,

> "வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்
> உயிரெலாம் தன்உயிர் ஒப்ப ஓம்பலால்
> செயிர்இலா உலகினில் சென்று நின்றுவாழ்
> உயிர்எலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்"

(அரசியற். 10.)

என்று வேந்தர்வேந்தனாகிய தசரதனை உடம்பாகவும், குடிமக்களை அவ்வுடம்பில்வாழும் உயிர்களாகவும் மாற்றிச்சொல்லிய திறத்தை மறுப்பார் யாவர்? அதிலும் ஒருடலில் ஒருயிர் வாழும்; பல்லுயிர்கள் வாழா. கம்பரோ "உயிரெலாம் உறைவது ஒருடம்பு" என்று பொய் எனக் கூறி மெய்ப் படுத்திய ஆற்றல் போற்றத்தக்கது. இவ்வாறு தொடக்கத்திற் கூறியதோடு அமையாது வேறு பல இடங்களிலும் கூறியிருக்கின்றார். அவர்க்கு அரசனை உயிராக்கூறிய இடமும் உண்டு.

தசரதசக்கிரவர்த்தியை உலகமக்களுக்கெல்லாம் உடம்பாகச் சொல்லநினைந்தபோதில், தாமும் (கவிச்) சக்கிரவர்த்தியாயிருப்பதால் தம்மையும் புலவராகிய மக்களுயிரெலாம் உறைவதோர் உடம்பாகக் கொண்டுதான் பாடியிருப்பார் போலும்.

"நின்று தவம்இயற்றித் தான்தீர நேர்ந்ததோ
அன்றிவ் வுலகத்துள் ஆருயிராய் வாழ்வாரைக்
கொன்று களையக் குறித்த பொருளன்றோ
நன்று வரங்கொடுத்த நாயகற்கு நன்றென்பார்"
(நகர்நீங்கு. 110.)

"வையம் மன்னுயிர் ஆகஅம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல்அன்ன மன்னனுக்கு
ஐயம் இன்றி அறம்கட வாதருள்
மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ?"
(மந்தரை சூழ்ச்சிப். 17.)

உலகில் ஒருத்தி தாலியொடு விளங்குங்காலத்தில் மற்றைய ஆபரணங்களை அணிந்துகொள்வாள். தாலியை இழக்கநேர்ந்த காலமுதல் வேறு எத்தகைய பணிகளையும் அணிய உள்ளம் ஒவ்வாள். அத்தகுசிறப்பு எல்லாப்பெண்டிர்க்கும் எய்தலரிது. அதனால் ஒருத்தி என்றது பொருத்தந்தானே! உலகில் மங்கலநாண் ஒன்று இருந்து, மற்றைய ஆபரணங்களைக் காத்தல் இயல்பாயுள்ளது. அதனைக் கம்பர் எதிர்மாறுகக்கூறும் இடத்தைநோக்கிமகிழ்வது அறிஞர்க்குரியதாகும்.

பிராட்டியை இராவணன் எடுத்துச் சென்ற காலத்தில் அவள் வழியில் எறிந்துவிட்டுப்போன ஆபரணங்கள் அல்லவா அவளிருக்குமிடத்தை அறியத் துணையாயிருந்தன? அறிந்துமீட்கக் காரணமாயின. அதனால், அவளது மங்கலக் கயிற்றினை மற்றைய ஆபரணங்கள் காத்தன என்பதில் எவர்க்கு இசைவிராது?

"கொற்றவற் காண்டுக் காட்டிக் கொடுத்தபோ தடுத்த தன்மை
பெற்றியின் உணர்தற் பாற்றோ உயிர்நிலை பிறிதும் உண்டோ
இற்றைநாள் அளவும் அன்னாய் அன்றுநீ இழித்து நீத்த
மற்றைநல் அணிகள்காண் நுன் மங்கலம் காத்த மன்னோ"

என்று கூறவாய்த்த வாய்ப்பு வேறு யார்க்கு எங்குநேரும்?

(முத்து சு. மா.)

270.

'சொல்லின்செல்வர்' திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்

அடைக்கலம்

தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு திருமுறைத் திருநாள் 5—6—52 அன்று நிகழ்த்திய பேருரையின் சுருக்கம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இராமபிரானிடம் சுக்கிரீவன் அடைக்கலம் அடைந்தான். அவனை அடைக்கலம் அடையும்படியாகச் செய்தவன் அநுமன். அநுமன் மிகச் சிறந்த கல்விமான், கேள்விமான். சொல்லின் செல்வன் அவன். அவன் இராமனையும் சுக்கிரீவனையும் ஒன்றுசேர்த்தான். என்னசொல்கிறுன்? இராமன் கிஷ்கிந்தைக்கு வந்தான். சுக்கிரீவனுடைய விருந்தினனுய் அமர்ந்தான். இலை போட்டிருக்கின்றது. காயும், கனியும் பரிமாறுகிறுர்கள். அருகிருந்து காவல்புரிகிறுன் இலக்குவன். இலக்குவன் இராமன் உண்ட மிச்சிலை உண்டு மகிழ்பவன். விருந்தினரை ஏற்று உபசரிக்கும் கடமை இல்லாளுக்கு அல்லவா உண்டு? இங்கே மனைக்குரிய மனையாள் இல்லையா என்று கேட்டார். இல்லையென்ற பதில் வந்தது. இராமனின் சிந்தனை சீதையிடத்திற் சென்றது,

பொருந்து நன்மனைக்கு உரிய பூவையைப்
பிரிந்துளாய்கொலோ நீயும் பின் என்றுர்.

நான்தான் அப்படியிருக்கிறேன் என்றுல் நீயும் மேற்படி தானு? என்றுர் இராமர். இதுதான் எதிர்பார்த்த சமயம் என்று எழுந்தான் மாருதி. 'ஐயனே! இவனுடைய கதையைச் சற்றுக் கேட்கவேண்டும். இவனுடைய உடம்பைப் பார்த்தீர்களா? வாட்டமாக இருக்கின்றது. ஏன் இப்படி வாட்டமுற்றது? என்பதைச் சிறிது கருணையோடு கேட்கவேண்டும்' என்றுன்.

"கடல் கடைந்த வெங்கர தலங்களால்
உடல் கடைந்தனன் இவன் உலைந்தனன்"

இவ்வாறு துன்புற்ற இவன் இப்பொழுது தங்களை அடைந்து விட்டான் என்று சொல்லி முடித்தான்.

இத்தகைய கொடுமைகளைக் கேட்ட இராமனுக்குச் சீற்றம் பிறந்தது. சீற்றத்தால் வாலியைக் கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது, இந்நிகழ்ச்சி சாப்பாட்டுக்கு முன்னையது. ஆதலால் சாப்பாட்டுக்கு முன்னே செய்த வாக்கு என்றும் மாறாது என்பதை நன்றாக அறிபவன் அநுமன். ஆகவே இராமபிரானிடத்தில் இப்பொழுது வாக்கு வாங்கிவிடவேண்டும் என்று மேலும் சொல்லுகிறான்; சுக்கிரீவனுடைய மனைவியையும் வாலி பறித்துக்கொண்டான் என்று.

உரிமை என்றிவற் குரிய தாரமாம்
அருமருந்தையும் அவன் விரும்பினான்
இருமையும் துறந்து இவன் இருந்தனன்
கருமம் இங்கிதே கடவுள் என்றனன்

கேட்கக் கேட்க இராகவனுக்குக் கோபம் பொங்குகிறது. 'இவ்வளவு கொடுமைகள் செய்யும் பாதகன் எங்கே இருக்கிறான்? சுக்கிரீவ! உன்னுடைய நாட்டையும், வீட்டையும் மீட்டித் தருவேன்' என்று வாக்களித்தான். சாப்பாட்டுக்கு முன்னே அப்படிச்செய்த வாக்கு மாறாதென்பதுதெரியும் அநுமனுக்கு. எனவேதான், அப்பொழுதே வாக்குவாங்கிவிட்டான் அநுமன். அந்த நிலையில் சுக்கிரீவனுக்கு அபயம் அளித்தான். சுக்கிரீவன் அடைக்கலம் அடைந்தான். இதனைக் கம்பர் தம் காவியத்தில் அழகாகச் சித்திரிக்கிறார்.

விபீஷணன் அடைக்கலப்படலம் அருமையான படலம். வீபீஷணன் அடைக்கலமென்று சொல்லி இராமனிடத்திலே வருகிறான். ஆனால், அவன் மாற்றானாகிய இராவணனுடைய உடன்பிறந்த தம்பி, அவனை எப்படிச் சேர்த்துக்கொள்வது என்று எல்லோரும் அஞ்சினார்கள். இராமன் எந்தப் பொருளையும் தன்னுடைய அறிவுநிறைந்த அறிஞர்கள் கூடியிருக்கின்ற சபையிலே சொல்லி அவர்களோடு ஆலோசித்துத்தான் முடிவுக்கு வருவான். அதை மீறி முடிவு செய்வதில்லை. நாட்டுத்

272

தலைவர்கள் எவ்வளவு கருத்தோடு காரியத்தைநடத்த வேண்டுமென்று இராமாயணத்தைப் பார்த்தாலல்லவா தெரியும்? சிறிய காரியமாயினும் சபையோருடன் கலந்து முடிவு செய்கின்ற முறையினைக் கம்பராமாயணத்தில் காண்கின்றோம். அதுதான் குடியரசின்முறையோ என்று நாம் எண்ணவேண்டியிருக்கிறது. அந்தமுறையில், விபீடணனைக் கொள்ளுவதா? தள்ளுவதா? என்ற கேள்வியை அறிஞர்கள் சபையில் வைத்தான் இராமன். சுக்கிரீவன் எழுந்தான். 'ஐயனே! அடைக்கலம் என வந்த அவனை ஏற்றுக்கொள்ளல் கூடாது. அவன் இங்கு உளவுபார்த்துப்போய்ச் சொல்லவந்தவனேயல்லாது அடைக்கலமாக வந்தவன் அல்லன்' என்று சொன்னான். அப்படியே ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ளுதலாகாது என்று முடிவு கூறுகிறார்கள். இந்தநிலையில் அநுமனைப் பார்த்தான் இராமன். அவன் ஒன்றும் பேசாமல் இருக்கின்றான். அறிவுடையவர்கள் அடங்கித்தானே இருப்பார்கள்? அடங்கியிருக்கிறான் அநுமன். உன் கருத்து என்ன? என்று அவனையும் கேட்டான் இராமன். அப்பொழுது பேசுகின்றான் அநுமன். ஒரு சபையிலே எப்படிப் பேசவேண்டும் என்று அநுமன் வாயிலாக நமக்குக் காட்டுகிறார் கம்பர். கல்வி, கேள்விகள் உடையவர் எப்படி யிருக்கவேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறாரோ அப்படியே நமக்கு அநுமனைக் காட்டுகிறார்.

> " நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
> வாயின ராதல் அரிது "

இது திருவள்ளுவரின் குறள். வணக்கமாக வாய் இல்லையானால் அவரிடத்திலே கல்வி, கேள்விகள் இல்லையென்று கூறுகிறது இந்தக்குறள். இந்தக் குறளைப் பொன்போல் தன்னுடைய கவியில் பதித்துவிட்டார் கம்பர், அநுமன் என்ன சொல்லுகிறான் நாமும் சிலவேளைகளில் நமக்குமுன் பேசிய பெரியோர்களைப் பின்பற்றிப் போலியாகப் பேசுகிறோம் அல்லவா? அந்தமாதிரியல்ல அநுமன் பேசியது. என்ன சொன்னான்? 'இதுகாறும் பேசிய பெரியோர்களெல்லாம் பேசிவிட்டார்கள் ஆனாலும்...' என்று ஆரம்பிக்கின்றான்.

"தூயவர் துணிதிறன் நன்று தூயதே
ஆயினும் ....''

ஆயினும், என்றவுடனே என்னசொல்லுவானோ? விஷயத்தை ஆதரித்துப் பேசுவானோ? நிராதரித்துப் பேசுவானோ? என்ற கவலை முகத்தில் தோன்றியது இராமனுக்கு. நான் சொல்லுவதற்கு ஒரு காரணமும் உண்டு. இதுவரையிலும் பல பெரியோர்கள் பேசினார்கள். நான் இலங்கைக்குச் சென்று வந்தவன். ஆதலாலே நான் சொல்லுகிறேன் என்கிறான். இதன் கருத்து என்ன? இதுவரையில் பேசியவர்கள் இலங்கையைக் கண்டவர்களல்ல. அநுமன் ஒருவன்தானே இலங்கைக்குச் சென்று வந்தவன்? அவன் என்ன சொல்லப் போகிறானோ என்றவண்ணம் இருந்தனர். அவன் சொல்லுகிறான். அரக்கன் என்ற காரணத்தினால் நாம் அவனைத் தள்ளுதலாகாது. இலங்கை முழுவதும் நான் சுற்றினேன். நான் பார்க்காத இடமில்லை. சாலை, சோலை, மாளிகை எல்லாவற்றையும் பார்த்தேன். அங்கெல்லாம் மது, மாமிசம் ஆகிய பொருள்களின் நாற்றம்வீசின. ஆனால், விபீஷணன் மனையில் மாத்திரம் அது இல்லை. மற்ற எல்லா வீடுகளிலும் இந்தக் காட்சியைத்தான் கண்டேன். எவ்வளவு மதுக்குடங்கள் நிறைந்திருந்தன தெரியுமா? மாமிசநாற்றமும் சகிக்க முடியவில்லை. ஆனால் விபீஷணன் வீடு எப்படி இருந்தது?

நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்
தந்தன கண்டிலேன் தரும தானமும்
வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து
அந்தணர் இல் எனப் பொலிந்ததாம் அரோ.

நல்ல முனிவர் தவச்சாலைபோல் விளங்கிற்று அவன் வீடு. அரக்கர் நாட்டிலேயிருந்தாலும் அரக்கர் வழக்கத்திற்கு மாறாக இருந்தவன் அவன் என்று காட்டினான். இராவணன் என்னிடம் நிந்தனையாகப் பேசும்பொழுது இராவணன்முன் தைரியமாக வேறு ஒருவரும் பேசவில்லை. இந்த விபீஷணன் ஒருவன்மட்டுமே பேசினான்.

மாதரைக் கோறலும் மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூய்தன் ருமெனு
ஏதுவில் சிறந்தன எடுத்துக் காட்டினன்.

"அவன் அநீதிசெய்தாலும் அவன் தூதன்தான். அவனைத் தொடக்கூடாது. சிறந்த அறநூல்கள் என்ன சொல்லுகின்றன என்பதை மறந்துவிட்டாயே" என்று அவன் தைரியமாக எடுத்துச்சொன்னுன். சீதை அசோகவனத்தில் இருக்கின்ருள் இதுகாறும் அவள் உயிரோடு இருப்பதற்கே காரணம் அந்தத் திரிசடைதான். இராவணன் அடாத மொழிகளைப் பேசினலும் 'அஞ்சாதே' என்று அபயம் அளிக்கிற தோழி திரிசடை. அவள் இந்த விபீஷணனின் திருமகள். அவள் இல்லையென்ருல் சீதையின் முடிவு என்ன ஆகியிருக்கும்? என்று உருக்கமாகப் பேசினுன். இவ்வளவும் பேசிய அநுமன் தன்பேச்சை முடிக்கும்பொழுது ஒன்று சொன்னுன். "எது எப்படியிருந்தாலும் சரி; அடைக்கலம் வேண்டும் என்று இங்கே வந்துவிட்டான் விபீடணன். அபயம் கொடுப்பதற்குப் பெரியோராகிய நீங்கள் இல்லை என்று சொல்லுதல் அழகாகுமா? அபயதானமளிப்பது உங்கள் குலப்பெருமையல்லவா' என்று சொல்லுகிருன். கேட்ட இராமன் தன் முடிவைக் கூறுகிருன்.

மற்றினி உரைப்பது என்னை? மாருதி வடித்துச்சொன்ன
பெற்றியே பெற்றி

இருசாராரும் சொல்லிய காரணங்களை நன்ருக ஆராய்ந்தேன், மாருதி வடித்துச்சொன்ன பெற்றியே பெற்றி என்கிருர்.

சீதையை இராவணன் எடுத்துச் செல்கிறதை வால்மீகி கூறுவது ஓர்முறை. சீதையைத் தொட்டுத் தூக்கிச்சென்ருன் என்று வால்மீகி கூறுகிருர். கம்பரோ, கண்ணகி பிறந்த தமிழ்நாட்டிலே ஒருகற்புடைய மங்கையைக்கண்ட நாட்டிலே—'பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில், ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையை' என்று கூறிய தமிழ் நாட்டிலே இப்படிக் கூறுவது பொருந்தாது என்று கண்டார். அவர் சொல்லுகிருர்?

"மண்ணொடுங் கொண்டு போனான் வானுயர் கற்பினள்தன்
புண்ணிய மேனிதீண்ட அஞ்சுவான் உலகம்பூத்த
கண்ணகன் கமலத்தண்ணல் கருத்திலாள் தொடுதல் கண்ணிஃ
தெண்ணருங் கூறும்மாய்தி என்றதோர் மொழியுண்டென்பான்.

சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு போகும் பொழுது பூமியோடு பெயர்த்துத் தூக்கிக் கொண்டுபோனான் என்று கூறுகிறார். சீதை அப்பொழுது அபயம் அபயம் என்று கூக்குரலிட்டாள். கேட்ட ஜடாயு இராவணனைத் தடுத்தான். எனக்கு அபயம் அளிப்பார் யாரும் இல்லையா? என்று கதறினாள் சீதை. உடனே ஓடிவந்தான் ஜடாயு. இராவணனுடைய வீரத்தின்முன்னே தன்னுடைய வீரம் செல்லாதென்பதை யறிந்தும் தடுப்பது தன்னுடைய கடமை என்று எண்ணினான்; தடுத்தான். இராவணன் வாளால் வெட்டி வீழ்த்தினான்.

"ஜடாயு சாதாரண மரணமடைந்தானா? தெய்வ மரணமல்லவா அடைந்தான்? அந்தத் தெய்வ மரணம் என்னுடைய சிறிய தந்தையாகிய ஜடாயுபெற்றார். ஜடாயு எனக்குச் சிறிய தந்தை. என்னுடைய தந்தை தசரதர் சிறிய தந்தை ஜடாயு" என்கிறான் இராமன். அவன் அப்படித்தானே கேட்டிருக்கிறான்? அபயம் கொடுப்பதால் எனக்கு என்ன தீங்குவந்தாலும் வருக என்று அபயதானம் வழங்கினான் ஜடாயு.

"சரண்எனக்கு யார்கொல்என்று சானகி அழுதுசாம்ப
அரணுனக்காவென் வஞ்சி அஞ்சலென்று அருளினெய்தி
முரணுடைக் கொடியோன்கொல்ல மொய்யமர் முடித்துத்தெய்வ
மரணம்என் தாதைபெற்ற தென்வயின் வழக்கன்றாமோ"

என்று பேசுகிறான் இராமன். இதிலே அடைக்கலத்தின் தன்மை அடங்கியிருக்கிறது. ஆராய்ந்து பாருங்கள்.

வாலிக்கு மைந்தனிருந்தான். அங்கதன் என்று பெயர் அவனுக்கு. 'அவன் தம்பி அங்கதன்' என்று நாம் சாதாரணமாகச் சொல்லுகிறோமே, எவன் தம்பி அங்கதன் என்று சிந்தித்துப் பார்த்தோமா? எவன் தம்பி அங்கதன் என்ற

276

வினுவிற்கு. அடுத்தமுறை நான் வரும்பொழுது விடை தந்தால் மகிழ்ச்சி கொள்ளுவேன். பிறப்புமுறையி வில்லாவிட்டால் சிறப்பு முறையில் இருக்குமா?

செல்வம் கொழிக்க வாழ்ந்தவன் வாலி, பேரரசன். கவலையறியாது வாழ்ந்தவன். அவனுக்கு அங்கதன் செல்லப்பிள்ளை; கவலையேதும் அறியாதவன். செல்வத்திலேயே வாழ்ந்தவன். வாலி போர் செய்து இரத்த வெள்ளத்திலே வீழ்ந்து கிடக்கின்றான். அந்தச் செய்தியை அறிந்தான் அங்கதன். ஓடிவந்தான். தன்னுடைய தந்தையை இரத்த வெள்ளத்தில் கண்டான். தன்னுடைய தந்தைக்கு இப்படி நேரும் என்று கனவிலும் கண்டவனல்ல. என்ன அருமையான காட்சி? சிவபூசை செய்கிற கைகளா இப்படியிருக்கின்றன? என்று எடுத்துப்பார்த்துக் கேட்டான். அநுமனும் சொல்கிறான் அந்த வாலியின் வரலாற்றை இராமனிடத்தில்.

> கிட்டுவார்பொரக் கிடைக்கின் அன்னவர்
> பட்ட நல்வரம் பாகம் எய்துவான்
> எட்டுமாதிரத் திறுதி நாளுமுற்
> றட்டமூர்த்திதாள் பணியு மாற்றலான்.

சிவனை வழிபடுகின்ற தன்மையுடையவன் வாலி. ஆகவே 'நீ சிவபூசை செய்யாமல் வீட்டிலிருக்கமாட்டாயே? இன்று எப்படி இங்குக் கிடக்கின்றாய்?' என்று கேட்கிறான் அங்கதன்.

> பஞ்சின் மெல்லடியாள் பாகன் பாதுகமல்ல யாவும்
> அஞ்சலித் தறியாச் செங்கை யாணையாய் அமரர்யாரும்
> எஞ்சலர் இருந்தார் உன்னால் இன்னமுதீந்த நீயோ
> துஞ்சினை வள்ளியோர்கள் நின்னின்யார் சொல்லற்பாலார்.

செங்கை இரண்டுவகை, இறைவனுக்கு நல்ல இலையும், பூவும் பறித்துப் பூசிக்கிற கை செங்கை, செங்கை - செம்மை சான்றகை.

வள்ளல்கை கொடுத்துக் கொடுத்துச் சிவந்தகை. சிவபூசை செய்து சிவக்கின்ற கை செங்கை. மற்றைய கைகள் எல்லாம் என்ன கைகளோ? சிவபெருமானை வணங்குவதற்கு

உன்னுடைய கைகள் தவறியது இல்லையே! அப்படிப்பட்ட கைகள் இப்படியா கிடக்கவேண்டும்? இப்படியா கிடக்கின்றன? தேவர்களுக்கெல்லாம் அமிர்தத்தை வாரிவாரிக் கொடுத்த உன்னுடைய கைகளா இப்படிக்கிடக்கின்றன? என்றெல்லாம் புலம்புகின்முன்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"

என்றுதானே வள்ளுவரும் கூறுகிறுர். 'நீ கிடைத்தற்கரிய அமிர்தத்தைப் பெற்ருய். ஆனுல், அதனை முற்றும் அப்படியே தேவர்களுக்கு அளித்து விட்டாயே. நீ அதனை உண்டிருந்தால் இன்று உனக்கு இறப்பு நேரிடாதே' என்கிருன். இப்படிச் சொல்லி அழுகிற மைந்தனை எண்ணினுன் வாலி. அவன் மனம் மாறிவிட்டது. 'எனக்கு இராமன் தீமையா செய்தான்' என்ற உணர்ச்சி அவனுக்கு வந்தது. தன்னுடைய அருமந்த மைந்தனை அணைத்துக்கொண்டு, நான் இறக்குந்தருவாயில் ஒரு வாசகம் சொல்லுகிறேன் கேள் என்கிருன்.

பாலமை தவிர் நீ என்சொல் பற்றுதி என்னின் ஐய
மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருள் வில்லுந்தாங்கி
கால்தரை தோயநின்று கட்புலக் குற்றதம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு மைந்த.

'நீ சிறுபிள்ளைத் தனத்தை விட்டுவிடு; தனக்கு மேல் ஒரு பொருள் உண்டு. அதனைப் பார். அதனை விட்டுவிட்டு நீ என்னை வணங்குகிருயே மைந்தா! அதன் திருவடியை வணங்கு. இதுதான் இறக்கின்ற தாதை உனக்கு சொல்லுகின்ற மந்திரம்' என்ருன் வாலி. உடனே அங்கதன் இராமன் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினுன். தந்தை சொல் மிக்கதோர் மந்திரம் இல்லையென்று அங்கதன் அறிந்தவனல்லவா?

"பொய்யடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவ மற்றுன்
கையடையாகும் என்று அவ் இராமர்க்குக் காட்டும் காலை"

அங்கதனை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக வாளை எடுத்து இராமன் அங்கதன் கையில் கொடுக்கின்றான். அதனை அங்கதன் கையில் ஏற்றுக்கொள்கின்றான். இந்த நிலையில் இருவர் கைகளும் ஒன்று சேர்கின்றன. இதனைப் பார்த்தவண்ணமாக வாலி உயிர்விடுகின்றான் என்கிறார் கம்பர்.

தனக்கு உவமையில்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

ஆதலின் மனக்கவலையில்லை வாலிக்கு, அவன் மனமகிழ்ச்சியோடு இன்பப்பயணம் தொடங்குகிறான். அந்த உடைவாள் அங்கதன் கையில் அன்றுமுதல் இருந்தது. அந்த உடைவாளை ஏந்திய அங்கதனை இமைபோல் காக்கின்றான் இராமன்.

இலங்கையிலே பெரும்போர். இந்திரஜித்து பெரியபெரிய அஸ்திரத்தைவிட்டான். எல்லோரையும் கிடத்திவிட்டது இராமன் ஒருவன்மட்டும் பாசறையிலிருந்தான். அன்று போருக்கு வரவில்லை. இறுதியாகத்தான் இராமன் வருகிறான். எல்லோரும் வீழ்ந்துகிடக்கின்றார்கள். இலக்குவனை வீழ்ந்து கிடக்கின்ற காட்சியைக் காண்கின்றான். அடுத்தாற்போல் அங்கதனும் வீழ்ந்துகிடக்கின்றான் அதைக்கண்ட இராகவனுக்குக் கண்களிலிருந்து நெருப்பு தோன்றுகின்றது.

"விடைக்குலங்களின் நடுவண் ஓர்விடை கிடந்தென்னக்
கடைக்கண் தீயுக அங்கதக் களிற்றினைக் கண்டான்"

என்கிறார் கம்பர். அவ்வாறு கண்டவன் மேலும் என்ன எண்ணுகின்றான்,

"படைக்கலங்களைச் சுமக்கின்ற பதகனேன் பழிபார்த்து
அடைக்கலப் பொருள் காத்தவாறு அழகிது"

என்று எண்ணுகின்றானும். வாய்விட்டும் சொல்கின்றான். கதறுகிறான். "அடைக்கலப் பொருளைக் காத்த அழகு நன்றாயிருக்கின்றதே; வாலி இறக்குந்தருவாயில் என்னிடத்தில்

ஒப்புவித்த அடைக்கலப்பொருளை இழந்து நான் படைக்கலப் பொருளைச் சுமந்து செல்கிறேனே" என்று கதறுகிறான் இராமன். அடைக்கலத்தின் பெருமையைக் கம்பன் எவ்வளவு அழகாகச் சித்திரிக்கிறான் தன்னுடைய காவியத்தில் ?

கடைசியாகப் பட்டாபிஷேகக் காட்சி. கம்பர் காட்டும் காட்சிக்கும், ரவிவர்மா காட்டுகின்ற காட்சிக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. கம்பர்காட்டுவதைப் பாருங்கள்.

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி ஓங்க வெண்ணெயூர்ச் சடையான்றங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

இந்தப் பாடலை யார்தான் மறப்பார் ? கம்பர் தனது நன்றி யறிதலை இப்பாட்டில் கூறிவிட்டார். பட்டாபிஷேகப் பாடலை இராமாயணம் படிக்கின்றவர்கள் ஒவ்வொருவரும் படிக்காமல் இருக்கமாட்டார்கள்.

சடையப்ப வள்ளலின் குலப்பெருமையை அங்கே சித்திரித்துவிட்டார் கம்பர். கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் மரபினோர் முடியை எடுத்து வசிஷ்டர் கரத்தில் கொடுத்தார் என்று கூறுகிறார். அநுமன் அரியணையைத் தாங்குகிறான். அங்கதன் உடைவாளை ஏந்திநிற்கின்றான். இதனை இரவிவர்மா படத்தில் நீங்கள் காணமாட்டீர்கள். அங்கதன் ஏன் அங்கே நிற்கிறான் ? உடைவாளின் கருத்து என்ன ? உடைவாள் அடைக்கலத்தின் சின்னம், பட்டாபிஷேகத்தில் சிறப்பாகக் காட்சியளிக்கிற தகுதி அங்கதனுக்கு வாய்த்தது. இதற்கு, அடைக்கலமாகக் கொண்டபொருளை ஒருநாளும் இராமன்விடமாட்டான் என்று பொருள். இவ்வாறு அடைக்கலத்தைப்பற்றிக் கம்பர் அழகாகக் கூறுகிறார்.

"மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

வித்துவான், T. S. தேவசேனாபதி தேசிகர், வேலூர்.

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

கடவுள் உண்மைக்கு மனிதப்பிறவி சான்றாக நிலவுகிறது என்று முன் கட்டுரையில் கண்டோம். மாநிலம் சான்றாவது யாங்ஙனம் என்பதனை இங்கு நோக்குவோம். ஒரு மண்குடம் இருக்கின்றது; அதனைப்பார்த்தவுடன் அதனை இயற்றிய குயவன் ஒருவன் உண்டு என்பதனை அறிகின்றோம். குடம் ஒரு காரியம் களிமண் - முதற்காரணம்; தண்டசக்கரம் - துணைக்காரணம்; குயவன் - நிமித்தகாரணம். அதுபோன்றே இவ்வுலகத்தை நோக்குவோம். இவ்வுலகம் தானாகவே தோன்றி இருத்தல் இயலாது. ஏன்? அது அறிவற்றபொருள் – சடப்பொருள். மண்குடம் தானாகத் தோன்றி இருத்தல் இயலாது. அது போன்றே உலகமும். உலகம் ஒரு காரியம்; மாயை முதற்காரணம்; பாசங்கள் துணைக்காரணம்; இறைவன் நிமித்தகாரணன். குடம் குயவனால் இயற்றப்பெற்றதுபோல இவ் உலகமும் இறைவனால் இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. எனவே நம் கண்முன் தோன்றும் இவ்வுலகைக்கொண்டு இறைவன் ஒருவன் உண்டு என்பதனை உணரலாம். உலகம் தோன்றி நின்று அழிகின்றது. அந்த முத்தொழிலை உலகம் தானாகவே செய்துகொள்ளமுடியாது. அத்தொழில்களைச் செய்யவல்ல இறைவன் ஒருவன் இருத்தல்வேண்டும் என்பதனைச் சிவஞான சித்தியார் என்ற சைவப்பெருநூலில்,

ஒருவனோ டொருத்தி ஒன்றென் றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறை வந்துநின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன்வேண்டும் தான்முத லீறுமாகி
மருவிடு மநாதிமுத்த சித்துரு மன்னிநின்றே.

என்று ஆசிரியர் அருளினார்கள். ஆசிரியர் திருவள்ளுவரும் இக்கருத்தையே,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்ற குறளில் விளக்கி இருத்தலும் நோக்கத்தக்கது. அக்குறளுக்கு உரை கூறவந்த பரிமேலழகரும், "காணப்பட்ட உலகைக் கொண்டு காணப்படாத கடவுளுக்கு நிச்சயம் கூறலான்" என விளக்குவதனையும் காண்க. கவிச்சக்கிரவர்த்தி கம்பரும், தெய்வப்புலவர் சேக்கிழாரும் தங்கள் நூல்களின் முதற்பாடல்களில் உலகு எனத் தொடங்கி இருப்பதும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது நாவரசர்பெருமான் மனிதப் பிறவி, மாநிலம் என்ற இரண்டு சொற்களினால் இறைவன் உண்டு என்பதனை இத்திருப்பாடலில் நன்கு விளக்கினார்கள்.

இனி, காணப்பெற்றால் என்ற சொல்லை நோக்குவோம்; யார் யாரைக்காண்பது என்றவினாவை எழுப்புவோம். மனிதன் தன் கண்ணினாலே காணவேண்டும். பொருள்களைக் கூர்ந்து ஆராய்ந்தால் மனிதன் தன் கண்களினால் காணக்கூடிய பொருள்களும் காணக்கூடாத பொருள்களுமாக இருக்கின்றன. அதாவது உருவம் உள்ள பொருள்கள் உருவம் இல்லாத பொருள்கள் மண் மரம் முதலிய பொருள்கள் உருவம் உடையவை. அறிவு முதலியன உருவம் இல்லாத பொருள்கள். மனிதன் உருவம் உள்ள பொருளையே காண்கின்றான். உருவமில்லா அருவப் பொருளை அவன் காண்பதில்லை. இறைவனோ உருவம் இல்லா அருவப்பொருள். மனிதனோ உருவம் உடையவன். எனவே மனிதன் உருவம் இல்லாத இறைவனைக் கண்ணினால் காணல் இயலாது. மனிதன் உருவம் இல்லாத இறைவனைக் காண வேண்டுமானால் மனிதனும் உருவம் இல்லாதவனாக ஆக வேண்டும். பனிக்கட்டியையும் தண்ணீரையும் ஒன்றுசேர்க்க வேண்டுமானால் பனிக்கட்டி தண்ணீராகமாறவேண்டும் அல்லது தண்ணீராவது பனிக்கட்டியாக மாறவேண்டும். தண்ணீர் பனிக்கட்டி ஆவது எளிதல்ல. பனிக்கட்டி தண்ணீர் ஆவது எளிது. அதுபோல உருவத்தோடுகூடிய மனிதன் உருவம் இல்லாத இறைவனை அடையவேண்டுமானால் மனிதனும் உருவம் இல்லாதவனாக ஆதல்வேண்டும். மனிதன் உருவத்தை நீக்கி அருவம் அடைதல் எளிதன்று. ஆனால் உருவம் இல்லா இறைவன் உருவத்தோடுவருவது எளிது. எனவே இறைவன் மக்கள்பால் வைத்த பெருங்கருணையால் திருவுருவங்கொண்டு காட்சியளித்து உய்யுமாறு செய்கின்றான்.

அருவனாய் நின்றானை ஆரறிவார் தானே
உருவனாய்த் தோன்றிலனேல் உற்று.

282

என்ற ஆன்றோர் வாக்கினால் உணரலாம். இதனால் இறைவன் ரூபியாகவும் அரூபியாகவும் நிலவுகின்றான் என்பது புலனும் அரூபியாகிய இறைவன் மற்றைய உருவங்கள் தோன்றுதற்கும் இறுதியில் எல்லாப்பொருள்களும் தன்னுள் ஒடுங்குதற்கும் ஏற்ற மற்றுமொரு நிலையை அடைகின்றான். அந்நிலையே அருவுருவமாகும். அந்த அருவுருவமே சிவலிங்கமாகும். எனவே இறைவன் மூன்று நிலைகளில் காட்சியளிக்கின்றான். அந்நிலைகளுக்குரிய பெயர்களையும் நம் நூல்கள் விளக்குகின்றன.

அருவம் — சிவம், சத்தி, நாதம், விந்து.

அருவுருவம் — சதாசிவம்.

உருவம் — மகேசன், ருத்திரன், மால், அயன்.

சிவம்சத்தி நாதம்விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் ருத்திரனமால் அயன் ஒன்றின் ஒன்றாய்
பவந்தரும அருவம்நாலு உருவமநாலு உபயம் ஒன்றும்
நவந்தரு பேதமஏக நாதனே நடிப்பன் என்பர்.

இம்மூன்று நிலைகளிலும் இறைவன் இரண்டு இரண்டு தன்மைகளோடு விளங்குகிறான். ஆண் தன்மை. பெண் தன்மை. இறைவன் அருளையே சக்தி என்கிறோம். இறைவனையும் அவன் திருவருளையும் பிரித்தல் இயலாது. ஆண்டவன் இல்லையேல் சக்தியும் இல்லை. சக்தி இல்லையேல் இறைவன் இல்லை. பிரிக்க முடியாத நிலையில் அமைந்துள்ளது. சூரியன் தன் ஒளியைக் கொண்டு இருளைப்போக்குவதுபோல் இறைவன் தன் திருவருளாகிய சக்தியைக்கொண்டு உயிர்களின் மயக்கமாகிய இருளைப் போக்குகின்றான். விளக்குச் சுடரில் தீயும் உண்டு ஒளியும் உண்டு. இரண்டையும் பிரிக்கமுடியாது. அதுபோன்றே ஆண்டவனிடமிருந்து சக்தியையோ சக்தியிடமிருந்து ஆண்டவனையோ பிரிக்கமுடியாது.

அருளது சக்தியாகும் அரன் தனக்கு
அருளை யின்றித் சிவம் இல்லை
அந்தச் சிவமின்றிச் சக்தி இல்லை.

இறைவன் இங்ஙனம் அம்மையப்பனாக இருத்தலினால்தான் உலக உயிர்கள் அனைத்தும் அம்மை அப்பனாக இருந்து உலக வளர்ச்சியைச் செய்துவருகின்றன. ஆண்டவன் தன் அருளையே பெண்

வடிவாகக்கொண்டு போகியாய்த்தோன்றி உயிர்கள் அனைத்தும் போகத்தை அனுபவிக்கும்படி செய்கின்றான். மின்சாரத்தை ஆராய்ந்துபார்த்தால் அதனுள் இரண்டுவகையான சக்திகள் இருப்பதைக் காணலாம். ஒன்று பாஸிடிவ். மற்றொன்று நெகடிவ். ஏன் இவை இரண்டுவகையாக இருக்கிறது என்பதற்கு எந்த விஞ்ஞானியும் காரணம் கூறமுடியவில்லை. இவ் இரண்டும் சேர்ந்தால் அல்லாமல் மின்சாரம் உண்டாகாது.

இருமையின் இன்றி இயங்காது உலகம்

என்பது விஞ்ஞானிகள் கருத்து.

எனவே இறைவன் முற்கூறிய மூன்று நிலைகளிலும் தன் சக்தியோடு காட்சி அளிக்கின்றான்.

சிவம் நாதம் சதாசிவம் மகேசன் ருத்திரன் திருமால் அயன்
சக்தி விந்து மனோன்மணி மகேசை உமை இலக்குமி சரஸ்வதி.

என்று இறைவன் இவ்வாறு காட்சி அளிக்கின்றான். இந் நிலைகளைக் காணும் வழிகளைப்பற்றி இனி ஆராய்வோம்.

(தொடரும்)

'மூட' பக்தியா?

பக்தி இல்லாதவர்கள் தற்பெருமையாகத் தங்களை 'மூட பக்தி' இல்லாதவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். தம்மிடம் இல்லாத ஒன்றைச் சொல்லிக் கொள்கையில், 'அந்தப் பாழும் காசு யாருக்கு வேண்டும்' என்று கூறுவதுபோல், இழிவாகக் குறிப்பிடுவது வழக்கம். தங்களிடம் இல்லாததால் பக்தியை 'மூட' பக்தியாக்க வேண்டாம்.

........பக்தி அவசியம். நல்ல ஜாதி மாட்டின் கன்று, தாய்ப் பசுவைப் போலவே நன்றாகக் கறக்கும். அதேபோல், நல்ல சக்தி உடையவர்கள் பரம்பரையில் தோன்றிய சந்ததிகளாகிய நம்மிடம் அந்தச் சக்தி இருப்பினும் நம்மிடம் 'பக்தி' இல்லாததால் அது பரிமளிக்க வில்லை........

....கோயில் முதலியவற்றை நம்மால் கட்ட முடியாவிட்டாலும் நன்கு பாதுகாப்பது அவசியம்....

—ராஜாஜி

தருமபுர ஆதீன தேவஸ்தானங்களில்:

1. உற்சவங்கள்:

தருமபுர ஆதீனத்தைச்சார்ந்த திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேசுவரர் தேவஸ்தானம், சீகாழி ஸ்ரீ சட்டநாதசுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம் திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரஸ்வாமி தேவஸ்தானம் ஆகிய திருக்கோயில்களில் சித்திரைத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருமுறைப் பிரசங்கங்களும், திருமுறைப்பாராயணமும் நடந்தன. சீகாழி திருமுலைப்பால் திருவிழாவன்றும், திருக்கடவூர் காலசங்கார விழாவன்றும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆங்காங்கு எழுந்தருளியாகி சாஸ்திரீய முறைப்படி விழாவை நடத்துவித்துத் தரிசனம் செய்தார்கள். அன்பர்களும் பக்திசிரத்தையுடன் கூட்டம் கூட்டமாக வந்து தரிசனம் செய்தார்கள்.

2. உற்சவப் பிரசங்கங்கள்:

திருக்கடவூரில் நிகழ்ந்தவை: 22—4—53ல் குத்தாலம். போர்டுஹைஹஸ்கூல் தமிழாசிரியர், வித்வான். திரு. வை. சுந்தரேச வாண்டையாரவர்கள் 'வன்றொண்டர் கல்விநிலை'. 23—4—53ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், ஆதீனப் பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'எங்கும் நிறைந்த பொருள்'. 24—4—53ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், நாகை நாஷனல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர், வித்துவான், திரு. வை மு. சண்முகதேசிகர் அவர்கள் 'சடைத்தலைகண்டு தழற்பிழம்புள் புக்கார்'.

திருப்பனந்தாளில் நிகழ்ந்தவை: 19—4—53ல் தருமபுர ஆதீன வித்துவான், சித்தாந்தப்புலவர்மணி, பாலகவி, வயிநாகரம் திரு. வே. இராமநாதன்செட்டியார் அவர்கள் 'ஆளுடைய பிள்ளையார்'. 20—4—53ல் திருவிடைமருதூர், திருவாவடுதுறை ஆதீன ஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. மு. நடராச தேசிகர் அவர்கள் 'அப்பரும் ஐந்தெழுத்தும்' 21—4—53ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், மதுரகவி, சித்தாந்தரத்நாகரம், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்

பேராசிரியர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'விழுமிய விமானம்' 24—4—53ல் தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர பாகவதர், எம்பார், பிர்மஸ்ரீ S. விஜயராகவாசாரியார் அவர்கள் & பார்ட்டி 'சோமாசிமாற நாயனர் கதை'. 25—4—53ல் இசையரங்கு: தருமபுர ஆதீன இசைக்கல்லூரி ஆசிரியர்கள், சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாத முதலியார் அவர்கள் பாட்டு. திரு. T. S. சம்பந்தம் பிள்ளை அவர்கள் பிடில். திரு. R. விசுவநாத அய்யர் அவர்கள் மிருதங்கம்.

3. திருமுறை மாநாடு.

ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் வழக்கம்போல் சீகாழி தேவஸ்தானத்தில் சித்திரைவிழாவை முன்னிட்டு ஸ்ரீ திருஞான சம்பந்தர் ஆலயத்தில் 20—4—53 முதல் 26—4—53 வரை திருமுறை மாநாடு நடைபெற்றது. சீகாழி பெருநிலக்கிழார் திரு. C. S. சிநிவாச முதலியார் அவர்கள் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள். மாயூரம் டிப்டி கலெக்டர் திரு. அம்பலவாணப் பிள்ளை B. A., அவர்கள் திறப்புரை நிகழ்த்தினர்கள் ஒவ்வொரு நாளும் அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்கள். அதன் விபரம் வருமாறு:—

20—4—53 திங்கட்கிழமை வித்துவான், திரு G. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M. A., B. L., (பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்) "உள்ளங்கவர் கள்வன்", புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள், (பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்) "பூம்பாவைப் பாட்டு" வித்வான், திரு. சேதுசுப்பிரமணியபிள்ளையவர்கள், (ஆசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்) "மெய்ப்பொருள்".

21—4—53 செவ்வாய்க்கிழமை தருமபுர ஆதீன வித்வான், பாலகவி, வயிநாகரம் திரு வே. இராமநாதன் செட்டியாரவர்கள், (ஆசிரியர், 'செட்டிநாடு' காரைக்குடி) 'நான்காந்திருமுறை' வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகரவர்கள், (துணைத்தலைவர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்) "குறுந்தொகைப் பெருங் கருத்துக்கள்" வித்துவான், திரு K. M. வேங்கடராமையா அவர்கள், M. A., B. O. L, (பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்) "போற்றுநில்லே".

22—4—53 புதன்கிழமை: இராவ்சாஹிப், திரு. C. S. சீநிவாச முதலியாரவர்கள், (பெருநிலக்கிழார், சீகாழி) "மீளா அடிமை" திரு. D. கிருஷ்ணமுதலியாரவர்கள், (ஓய்வுபெற்ற, மாவட்ட விற்பனைவரி இலாகா அதிகாரி, சீகாழி) "திருவாசகத் தேன்" வித்துவான், திரு. வை. மு. சண்முகதேசிகரவர்கள், (தலைமைத் தமிழாசிரியர், தேசீய உயர்நிலைப்பள்ளி, நாகை.) "திருக்கோவை, பொருள்வயிற்பிரிவு".

23—4—53 வியாழக்கிழமை: வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள், (தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, திருவாரூர்) "கற்பகக்கனி" கோயம்புத்தூர், திருமந்திரமணி, துடிசைகிழார், திரு. அ. சிதம்பரனுர் அவர்கள் "அசபை".

24—4—53 வெள்ளிக்கிழமை: வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்கள், (சீகாழி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை) "தேம்புனமே! நீ சொல்லு" இராவ்சாஹிப், திரு அருணுசலக்கவுண்டரவர்கள், (பேராசிரியர் ம. தி. தா. இ. கல்லூரி, நெல்லை) "தொகைநூல்" திருவண்ணுமலை ஆதீன வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவாரவர்கள், (தலைமைத் தமிழாசிரியர், பொன்னையா உயர்நிலைப்பள்ளி, திருச்சி) 'அற்புதத் திருவந்தாதி'

25—4—53 சனிக்கிழமை: குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தலைவர், சிவசேனுபதி, திரு. P, T. S. குமாரசாமிச் செட்டியார் அவர்கள், "சேக்கிழாரின்தெய்வப்புலமை" வித்துவான், திரு. பஞ்சநதம்பிள்ளை அவர்கள், (தமிழாசிரியர், திருச்சி) ' மங்கையர்க்கரசியார்".

அன்று இரவு யானைமீது திருமுறை ஊர்வலம் நடைபெற்றது. தேவாரவகுப்பு ஆசிரியர், மாணவர்கள், விழாவிற்கென வந்திருந்த பிற இன்னிசையாளர்கள் ஆகியோர்கள் பன்னிரு திருமுறைப்பாராயணம் செய்துகொண்டு வந்தனர். தக்க இன்னிசைக்கருவிகளின் துணைகொண்டு பாடிய அவர்கள் இன்னிசை அனைவரையும் பரவசமுறச்செய்தது. தருமபுர ஆதீனப்பாடசாலை மாணவர்களும் பாராயணத்தில் கலந்து கொண்டார்கள்.

26—4—53 ஞாயிற்றுக்கிழமை: தருமபுர ஆதீனம், இசைக் கல்லூரி ஆசிரியர், சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாத முதலியாரவர்கள் பாட்டு, பிடில் ஆசிரியர் திரு. T. S. சம்பந்தம் பிள்ளையவர்கள் பிடில், மிருதங்க ஆசிரியர், குத்தாலம், திரு. R. விசுவநாத அய்யரவர்கள் மிருதங்கம்.

4. தேவாரவகுப்பு ஆண்டுவிழா — திருமுறைவிழா:

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் **தேவாரவகுப்பு ஆண்டுவிழா** *21—4—53* அன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்குமுதனுள் தேவஸ்தானத்’ தில் புதிதாக அமைக்கப்பெற்ற **ஒலிபெருக்கித் திறப்புவிழாவும்** மறுநாள் வாரந்தோறும் நடைபெற்றுவந்த **பெரியபுராண விரிவுரை நிறைவுவிழாவும்** ஆண்டுவிழாவுடன் கலந்துகொண்டன. ஆகவே இந்த மூன்று நாளும் திருமுறைப் பெருவிழாவாக அமைந்தது. விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

20—4—53, திங்கள் மாலை திறப்புவிழா தொடங்கிற்று. தேவாரவகுப்பு மாணவிகள் திருமுறை ஓதினர். கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத் சோசுந்தரத்தம்பிரான்சுவாமிகள் அனைவரையும் வரவேற்க, திருவையாறு வழக்கறிஞர் திரு. V. கிருஷ்ணமூர்த்தி ஐயர் B A., B. L. அவர்கள் அன்று தலைமைதாங்கித் திறப்புரையும் ஆற்றினார்கள். சீனிவாசராவ் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. த. சா. இராமராவ் அவர்கள் ஞானசம்பந்தர் திருமுறையைப் பற்றி விளக்கிப் பேசினார்கள். அடுத்து அரசர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், திரு. வி.அ. அரங்கசாமி அவர்கள் திருநாவுக்கரசர் திருமுறையை எடுத்துக்கொண்டு அவர் பாடலில் காணும் நயங்களை அனைவரும் அறியுமாறு பேசினார்கள். ஷ கல்லூரி வித்துவான் இறுதிநிலைவகுப்புமாணவர். திரு. சோம, ஐயாறு சுந்தரர் செந்தமிழ் நலங்களை விளக்கினார். கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுவாமிகள் நன்றியுரையுடன் அன்றையவிழா முடிந்தது.

மறுநாள் *21—4—53* செவ்வாய் மாலை 6மணிக்கு இறை வணக்கத்துடன் கட்டளை விசாரணை, ஸ்ரீமத், சுவாமிகள் அவர்கள் சீரிய தலைமையில் தேவாரவகுப்பு ஆண்டுவிழா தொடங்கிற்று. தலைவர் முன்னுரைக்குப் பின் மேலைச்சிவபுரி

கணேசர் செந்தமிழ்க்கல்லூரி விரிவுரையாளர் வித்துவான் திரு. சோமசுந்தரம் அவர்கள் மணிவாசகர் மணிமொழிகளைப்பற்றிப் பேசினார்கள். ஒன்பதாம் திருமுறையைப்பற்றி கரந்தை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் புலவர் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. ந. இராமநாதன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். திருவாவடுதுறை ஆதீன வித்வான். சித்தாந்த சைவ மணி திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் திருமூலர் திருமுறையை எடுத்து விளக்கினார்கள். தேவார வகுப்பு மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் பல பரிசுகள் வழங்கப் பட்டன. தலைவர் முடிவுரைகூற கடவுள் வாழ்த்துடன் அன்றைய நிகழ்ச்சி நிறைவெய்தியது.

22–4–53 புதன் மாலை 5 மணிக்கு, பெரியபுராண விரிவுரை நிறைவுவிழா கொண்டாடப்பெற்றது. மாணவ மாணவிகள் கடவுள் வணக்கப் பாடல்கள் பாடினார்கள். அரசர் கல்லூரித் தலைவர் திரு. பெ. திருஞானசம்பந்தம் அவர்கள் M. A., விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். திருமுறைப் பாராயணத்துடன் திருமுறைச் சுவடிகளை எழுந்தருளச்செய்து நகர்வலம் கொண்டுவரப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப் பின் ஷை கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. M. வேங்கட ராமையர் அவர்கள். 'பதினொராந்திருமுறை' என்பதுபற்றியும், சீனுவாசராவ் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான் திரு. M. ஆபத்சகாயம் அவர்கள் 'சேக்கிழார் கண்ட செல்வியர்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். அடுத்து இறுதியாக, தொடர்ந்து பெரியபுராணவிரிவுரையாற்றிவந்த தருமபுர ஆதீனப் புலவர் வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் (அரசர் கல்லூரித் தலைமைப் பேராசிரியர்) பெரிய புராணச் சிறப்பைப் பேசியதோடு விரிவுரைப்பணியில் தம்மை ஈடுபடுத்திய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிகட்குத் தம் வணக்கத்தைச் செலுத்திக்கொண்டார்கள். கடைசியாக, விரிவுரையாற்றிவந்த திரு பிள்ளை அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் திருவுள்ளப் பாங்கின்படி ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் மகாசந்நிதானம் அவர்கள் அருளிய ஆசிடன் பரிசையும் வழங்கினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பிறகு ஸ்ரீமத் சுவாமிகள் நன்றிகூறக் கடவுள் வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

திருப்பனந்தாள் :- ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் உற்சவம் ஐந்தாந் திருநாள் 23—4—53 அன்று மாலை 5 மணிக்கு, தேவஸ்தானத் தேவார வகுப்பு ஆண்டு விழா திருமுறை விழாவாகக் கொண்டாடப்பெற்றது. விழாவிற்கு, தூத்துக்குடி. வ. உ. சி. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் சித்தாந்தத் தினகரன், வித்துவான் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். தேவார வகுப்பு மாணவ மாணவிகள் இன்னிசைப்பாக்கள் பாடினர், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸ்பால் திரு K. M. வேங்கடராமையா அவர்கள் M. A., B. O. L. திருமுறைப் பெருமைகளைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள். தேவார வகுப்பு மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன தேவஸ்தானக் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றிகூறக் கடவுள் வாழ்த்துடன் விழா நிறைவுற்றது. அதற்குமேல் இன்னிசைவாணர்களும் வகுப்பு ஆசிரியர் மாணவ—மாணவிகளும் தக்க இன்னிசைக் கருவிகளுடன் திருமுறை ஓதிவர, யானைமீது திருமுறை ஊர்வலமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

" ஞானசம்பந்தம் "

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
" ஞானசம்பந்தம் " காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

290

தருமபுர ஆதீனப் பிரசாரம்

1, தேவஸ்தானங்களில் :-

இம்மாதத்தில் சேரிப்பிரசாரம், ஆலயப் பிரசாரம் என்ற இருபகுதியாகப் பிரிக்கப்பெற்றுப் பிரசாரம் நடைபெற்றது. ஆலயப் பிரசாரம் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றாகிய திருக்கடவூரிலிருந்து தொடங்கி சீகாழி, பனந்தாள், திருவையாறு, ஏனைய சப்தஸ்தானத் தலங்கள், தஞ்சை, சுவாமிமலை ஆகிய இடங்களில் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கடவூரில் :- 19—4—53 அன்று அங்குத் துவஜாரோகணம் ஆதலின் ஆலயத்தில் பெருங்கூட்டம் மாலை 5 மணிக்கு நூற்றுக்கால் மண்டபத்தில் தொடக்கம். தேவஸ்தானத் தேவார வகுப்பு மாணவர்கள் திருமுறை ஓதினர். கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் பிரசார கோஷ்டியினரை வரவேற்றுப் பேசினார்கள். பின்னர் வித்துவான் திரு. V. S. குருசாமி அவர்கள் தேவாரத்தின் சிறப்பினையும், நாயன்மார்களிடத்தில் நாம் காணும் அருள் விளக்கங்களையும், அவர்கள் பாடல்களில் காணும் நயங்களையும் எடுத்து விளக்கிப் பேசினார்கள். இரவு 8 மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

சீகாழியில் :- 21, 22—4—53 ஆகிய இருநாட்களிலும் நடைபெற்றது, சித்திரைத் திருவிழாவை முன்னிட்டுத் தேவஸ்தானத்தின் சார்பில் திருமுறை மாநாடும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஆசிரியர்கள் பிரசாரத்தின் சார்பில் கலந்துகொண்டு பணியாற்றினார்கள். மாணவர்கள் திருமுறை ஓதினர். 22—4—53-ல் வித்துவான் திரு. V. S. குருசாமி 'திருவாசகத் தேன்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

திருப்பனந்தாளில் :- 23—4—53 அன்று அங்கு தேவார வகுப்பு ஆண்டு விழாவும், திருமுறை விழாவும் நடைபெற்றன. அதில் பிரசார கோஷ்டியினர் கலந்துகொண்டு திருமுறை ஊர்வலத்தில் திருமுறைப் பாராயணம் செய்து வந்தார்கள்.

ஆருந்திருநாளாகிய 24—4—53 அன்று திருப்பனந்தாளில் கோயிலின் முன்மண்டபத்தருகில் பிரசார கோஷ்டியினரின் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. மாலை 4½ மணி முதல் 5 மணிவரை தேவாரவகுப்பு மாணவிகளும், தேவாரப் பாடசாலை மாணவர்களும் திருமுறைப் பாராயணம் செய்தனர். பிரசாரக் குழுவினரின் சார்பில் வித்துவான் வி. சா. குருசாமி வரவேற்றுப் பேசினர். பின்னர், கரந்தைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. அடிகளாசிரியர் அவர்கள் 'குறிக்கோள்' என்னும் தலைப்பில் முக்கால்மணி யளவில் சொற்பொழிவாற்றினர்கள். பின்னர் வித்துவான் திரு. வி சா. குருசாமி அவர்கள் 'திருமுறை இலக்கிய நலம்' என்னும் பொருள்பற்றிப் பேசினர். வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றியுரைகூற, பிரசாரம் கடவுள் வாழ்த்துடன் இனிது முடிந்தது. பின் பிர்மஸ்ரீ விஜய ராகவாசாரியாரவர்கள் 'சோமாசிமாற நாயனர்' கதா கால க்ஷேபம் நடைபெற்றது.

திருவையாற்றில் :- 25—4—53-ல் காலை திருப்பனந்தாளை விட்டுப் பிரசார வாகனம் 7 மணியளவில் புறப்பட்டு 10 மணிக்குத் திருவையாறடைந்தது. மாலை பாட்சாலை மாணவர்கள் தேவார இசைவிருந்தளித்தனர்.

26–4–53-ல் ஐயாறப்பர் ஆலய பிரசார மண்டபத்தில் பிரசாரம் நடைபெற்றது. இயற்றமிழ்ப் புலவர் திரு. நா. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினர்கள். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரைகூறக் கூட்டம் தொடங்கப்பெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின்னர் வித்துவான், திரு. கோபாலய்யர் B. O. L. அவர்கள் 'சங்க இலக்கியங்களில் கடவுட்கொள்கை' என்ற தலைப்பில் ஒரு மணிநேரம் பேசினர். பின்னர் வித்துவான், திரு. ராமராவ் அவர்கள் 'அப்பர் அருள்மொழி' என்னும் தலைப்பில் ஒருமணி நேரம் பேசினர். தலைவர் அவர்கள் முடிவுரைக்குப்பின் திரு. வித்துவான் வி. சா. குருசாமி நன்றிகூற அன்றைய கூட்டம் இனிது முடிந்தது.

திருப்பழனத்தில் :- 27—4—53. 'பலர் பாடும் பழனம் என்று அப்பரடிகளால் சிறப்பிக்கப்பெறுவதும், சப்த ஸ்தானத்

தலங்களில் இரண்டாவதுமாகிய திருப்பழனம் ஸ்ரீ ஆபத்சகாய சுவாமி திருக்கோயிலில் அன்று பிரசாரம் நடந்தது. திருப் பழனம் தேவஸ்தானம் டிரஸ்டி திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ஐயர் B. A., B. L., அவர்கள் தலைமை தாங்கினார்கள். ஆதீனம் செய்துவரும் சேவைகளை வெகுவாகப் பாராட்டினார்கள். பின்னர், வித்துவான் திரு. கங்காதரன் அவர்கள் 'அப்பரும் அப்பூதியும்' என்பதுபற்றியும், குத்தாலம் கழக உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண் டையார் அவர்கள், 'கல்வெட்டுக்களும் கடவுட்கொள்கையும்' என்பதுபற்றியும், திரு. வேங்கடராமன், 'தடுத்தாட்கொண்ட லீலை' என்பதுபற்றியும், திரு. அண்ணாமலை 'கடவுளன்பு' என்பதுபற்றியும், திரு. T. S, கந்தசாமி 'சொன்னயம்' என்பது பற்றியும், வித்துவான், திரு. வி. சா. குருசாமி 'குயிலே கூறு' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர். பின் பிரசாரகோஷ் டித் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சில நல்லுரைகூறத் தலைவர் முடிவுரையோடு கூட்டம் முடிவுற்றது.

திருவையாற்றில் :- 28-4-53 சப்தஸ்தானத் திருவிழாவை முன்னிட்டுப் பெருந்திரளான மக்கள் அன்று அங்கு கூடி இருந் தனர். ஆகவே அன்றைய கூட்டத்திற்கு அங்கேயே ஏற்பாடு செய்யப்பெற்றது. தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமைவகித்தார்கள். திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் 'அப்பரும் சம்பந்தரும்' என்பதுபற்றியும், வித்துவான் வி. சா. குருசாமி அவர்கள், 'திருக்குறளும் சமயமும்' என்பதுபற்றியும், புலவர் திரு. அரங்கசாமி அவர்கள் 'சமயக்கொள்கை' பற்றியும் சொற் பொழிவாற்றினர். தலைவர் முடிவுரையோடு கூட்டம் முடி வுற்றது.

தஞ்சை இராஜராஜேஸ்வரத்தில் :- 29—4—53 புதன்கிழமை சமயப் பிரசாரம் பெருவுடையார் கோயில் டிரஷரரும் மானே ஜரும் ஆகிய R. மோகனரெங்கய்யா அவர்கள், பிரசாரம் நடை பெறுவது குறித்துப் பெரிதும் மகிழ்ந்தார்கள். தேவஸ்தானச் சார்பிலேயே துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் பிரசாரத்துக் குரிய ஏற்பாடுகளையும் நன்கு செய்திருந்தார்கள். மாலை 6-மணி அளவில் பிரசார வாகனம் தஞ்சைப் பெருவுடையார் ஆலயம்

வந்தடைந்தது. இக்கூட்டத்திற்குத் திருவையாறு கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமை வகித்தார்கள். 'கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தைப் பரப்ப என்னென்னசெய்து வருகிறார்கள்? நாம் இவ்வேளையில் ஓய்ந்திருக்கிறோம். சைவர்களே! விழித்தெழுங்கள்' என்ற கருத்தை வெளிப்படுத்தியது அவர்கள் பேச்சு. குழுவினரைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர் திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள். பின்னர் பேச்சுக்கள் தொடங்கப் பெற்றன. அரசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், புலவர் அ. அரங்கசாமி அவர்கள் 'கருவூரார் தமிழ்' என்பதுபற்றியும் குத்தாலம் கழக உயர்பள்ளித் தமிழாசிரியர் திரு. சுந்தரேச வாண்டையார் அவர்கள் 'பெருவுடையார் கோயில் கல்லெழுத்துக்கள்' என்பதுபற்றியும், வித்துவான் வி. சா. குருசாமி அவர்கள் 'ஒருபாடல்' என்ற தலைப்பிலும் பேசினார்கள்.

சப்தஸ்தானத்தலங்களில்:- *30—4—53* திருவையாற்றில் சப்தஸ்தானத் திருவிழா ஆரம்பமாகிறதென்றால் மக்கள் குடும்ப சகிதமாக குழந்தைகளோடு புறப்பட்டு வருவார்கள். அவ்வளவு விசேஷம் இவ்விழா. நந்திகேசுரரின் கலியாணச்சிறப்பைக் கொண்டாட ஏழு ஊர் சுவாமிகளும் புறப்பட்டுச்சென்று அதனைச் சிறப்பிக்கும். இது சப்தஸ்தானத்தின் ஐதிகம். பல லக்ஷக்கணக்கான ஜன சமுத்திரத்திடையே பஞ்சநதீஸ்வரர் பவனிவருவார். இவ்விழாவில் சமயப்பிரசாரம் நன்கு பயன்தருமென்ற நம்பிக்கையில் ஆங்காங்கு முன்னேற்பாடுகள் செய்யப் பெற்றன. பஞ்சநதீஸ்வரர் அந்த அந்த ஊரை அடைவதற்கு முன் பிரசாரம் தொடங்கி நடைபெறும்.

திருப்பழனத்தில்:- தலைவர் திரு. இராமகோவிந்தசாமிப் பிள்ளை. பேச்சாளர் வித்துவான். திரு. தா. சா. இராமராவ் அவர்கள் வித்துவான் வி. சா. குருசாமி அவர்கள். வித்துவான். திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள். திரு. இராமராவ் அவர்கள் அப்பர் தேவாரங்களின் அருங்கருத்துக்கள் என்பது பற்றியும் திரு. குருசாமி அவர்கள் மனக்கோயில் என்பது பற்றியும், திரு. சுந்தரேசவாண்டையார் அவர்கள் அப்பூதி அடிகளார் வரலாற்றைப் பற்றியும் பேசினார்கள்.

திருச்சோற்றுத்துறையில்:- தலைவர் திரு. இராமகோவிந்த சாமிப்பிள்ளை அவர்கள். பேச்சாளர் திரு. சோம. ஐயாறு, வித்துவான். திரு. அரங்கசாமி, திரு.ந.மு. கோவிந்தராசநாட்டார் ஆகியோர். திரு. ஐயாறு அவர்கள் தோழமை அன்பு என்பது பற்றியும், திரு அரங்கசாமி அவர்கள் சமயக்கொள்கை என்பது பற்றியும் பேசினார்கள். பின்னர் திரு. கோவிந்தராச நாட்டார் அவர்கள் முன்னைப்பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருள் என்றகருத்தை அடியொற்றி மொஹஞ்சதரோவிலும் ஹரப்பாவிலுங்கண்ட புதைபொருளில் சிவமதக்கொள்கை பரவிய விதத்தை நன்கு விளக்கினார்கள்.

திருவேதிகுடியில்:- தலைவர் திரு. கோவிந்தசாமிப் பிள்ளை. வித்துவான் வி. சா. குருசாமி. அவர்கள் கோயில் எலி என்ற தலைப்பில் மஹாபலிசக்கிரவர்த்தி விளக்குத் தூண்டிப்பெற்ற பெருமையை விளக்கினார்.

திருக்கண்டியூரில்:- தலைவர் திரு. பெ. திருஞானசம்பந்தம் அவர்கள் M.A.L.T. அரசர்கல்லூரி திருவையாறு. பேச்சாளர்கள்: வித்துவான் திரு. வை, சுந்தரேசவாண்டையார் அவர்கள், திரு. தா. சா. இராமராவ் அவர்கள், திரு. வி. அ. அரங்கசாமி அவர்கள், திரு. சோம ஐயாறு அவர்கள், திரு. வி. சா. குருசாமி. திரு பெ. திருஞானசம்பந்தம் அவர்கள் ஆதீனம் செய்துவரும் தொண்டைப்பாராட்டி மக்கள் சமய உண்மைகளை உணர வேண்டும் என வலியுறுத்தினர். திரு. இராமராவ் அவர்கள் சமயக்கொள்கை பற்றியும், திரு. அரங்கசாமி அவர்கள் சமயத் தொன்மையையும், திரு. ஐயாறு அவர்கள் தெய்வமணக்குங்கவி என்பதுபற்றியும், திரு. வி. சா. குருசாமி திருவாசகத்தேன் என்பதுபற்றியுஞ் சொற்பொழிவாற்றினார்கள்.

திருப்பூந்துருத்தியில்:- தலைவர் திரு. இராமகோவிந்தசாமி பிள்ளை அவர்கள். பேச்சாளர் வித்துவான் M. சுந்தரராசன் அவர்கள், வி. அ. அரங்கசாமி, திரு. தா. சா. இராமராவ், ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள். அன்றைய பேச்சு அப்பர் சுவாமிகளைப்பற்றியதே. அப்பரும் சம்பந்தரும், அப்பரும்

925

திலகவதியாரும், அப்பரும் அப்பூதி அடிகளும், அப்பர் அருண் மொழி இன்னோரன்ன தலைப்புக்களில் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியோடு சப்தஸ்தானப் பிரசாரம் முடிவுற இருப்பதை முன்னிட்டு, பிரசாரக் குழுவினரின் சார்பில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி அவர்கள் இதுவரை பிரசாரப் பணிகளில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய புலவர் பெருமக்கட்கும் அவ்வக்கோயில் நிர்வாகிகட்கும் தனித்தனியே நன்றிகூறினர். தருமபுரம் ஆதீனம் தேவாரப் பாடசாலை மாணவர்களின் இன்னிசையோடு கூட்டம் இனிது முடிவுற்றது.

சுவாமிமலையில்:- 1—5—53 காலை, திருவையாற்றுச் சுற்றுப் பயணத்தை சிறந்தவகையில் நடத்திக்கொண்டு திரும்பி தருமைக்குப் புறப்பட்ட பிரசார வாகனம் வரும்வழியில் திருவேரகம் சுவாமிநாதனின் திருநோக்கம் இக்குழுவினரைத் தடைப்படுத்தவே அவனருள் நோக்கத்தில் ஈடுபடும் இன்றியமையாமை ஏற்பட்டது. அங்கும் கூட்டம் நடந்தது. ஆலயமெங்கும் ஜனத்திரள். எதிர்பாராதவகையில் அன்று சுவாமிக்குச் சந்தனக்காப்பலங்காரம். சுவாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு மலைமேல் சன்னதியில் கூட்டம் தொடங்கப்பெற்றது. தேவார மாணவர்களும், உள்ளூர் வெளியூர் இசைவாணர்களும் கலந்துகொண்டு பணியாற்றினர். பின்னர் பிரசாரக் குழுவினர் சார்பில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'முருகன் திருவருட்' பெருமையை எடுத்துப் பேசினர், கூட்டம் சுமார் 1½மணியளவில் நடைபெற்றது. பிரசாரக்குழுவினரைக் கோயில் நிர்வாகிகள் நன்கு வரவேற்று உபசரித்தனர். இரவு 9 மணியளவில் பிரசாரக் குழுவினர் தருமைக்குப் புறப்பட்டனர். மணி 12 யளவில் தருமைக்கு வந்து சேர்ந்தனர்.

2. மாயூரம் தாலுக்கா சேரிகளில் :

வழக்கம்போல் இந்த மாதமும் 20—4—53 முதல் 30—4—53 முடிய திருக்கடவூரைச்சுற்றியுள்ள சேரிகளில் பிரசாரம் நடைபெற்றது. பொதுவாக எல்லா இடங்களிலும்

மக்கள் ஆதரவு நிரம்ப இருந்தது குறிப்பிடத்தக்கது. உண்மையில் கடவுள்பக்தி குறையாத இடம் சேரிகள் என்று சொல்லிவிடலாம். கடவுளுக்குப் பயந்து சத்தியத்துக்குப் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்ற எண்ணம் சேரிகளிடையே காணப்படுகிறது. அங்கங்கேயும் உள்ள மாரியம்மன் காளியம்மன் கோவில்களில் வழிபாடுசெய்து கூட்டத்துக்கு வருகிறார்கள். பஜனைசெய்வதில் அவர்களுக்கு மிகுந்த ஆசை இருக்கிறது. சில இடங்களில் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள கூலித் தகராறுகளாலும் அரசியல் கட்சிப் பிரசாரங்களாலும் கீழ்க்காணுவனபோன்ற சில கேள்விகள் கேட்டார்கள்.

1. இருட்டுகிறமட்டும் வேலைசெய்தாலும் ஒருமரக்கால் கூலிகூடக் கொடுக்கமாட்டேன் என்கிறார்களே; அப்படியிருக்க நாங்கள் கடவுளை வழிபட்டு என்னசெய்வது ?

2. உழுதமாட்டுக்கு வைக்கோல்கூட வைக்கமாட்டேன் என்கிறார்களே ?

3. உங்க மடத்துப் பெரியசாமி குத்தகைதாரரிடம் குத்தகை கொடுக்காமல் நேரில் எங்களிடம் கொடுத்தால் என்ன? அவர் மாவுக்கு 3 மேனி கொடுத்தால் நாங்கள் 5 அல்லது 6. கொடுப்போமே.

பிரசாரகர்கள் அங்கங்கே தக்கபடி பதில் அளித்து வந்தார்கள். சேரிகள்தோறும் இப் பிரசாரத்தை இப்படியே நிறுத்தி விடாமல் மாதம் ஒருமுறையாவது வந்துசேர்ந்தால் எங்களுக்கு அது பெரிய வழிகாட்டியாக இருக்கும் என்றும் கேட்டுக் கொண்டார்கள் சேரிமக்கள்.

பிரசாரத்தின் பயனாகச் சேரிமக்களில் பலர் குழந்தை குட்டிகளுடன் விடியற்காலை நீராடி அர்ச்சனை சாமான்களுடன் கோவிலுக்கு வருவது குறிப்பிடத் தக்கது. இந்தப் பிரசாரத் திட்டத்தில் பொரையார் ஸ்ரீமான் N. ரெங்கசாமி ஐயர், B. A., L. T., அவர்களும், நமசிவாயநாடார் அவர்களும், சிதம்பரம் நயினியப்பப்பிள்ளை அவர்களும், V. குருசாமி அவர்களும் கலந்து

கொண்டமை பாராட்டத்தக்கது. சேரிப்பிரசாரத் திட்டத்தில் தம்முடைய முழு கவனத்தையும் செலுத்தி ஊக்கிவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணையின்வண்ணம் ஆதீனக்கல்லூரி ஆசிரியர் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் பிரசாரத்தை நடத்திவருகிறார்கள்.

20—4—53ல் நீஞ்சாங்குளம் மாரியம்மன்கோவில் முன்னிலையில் ஸ்ரீமான். நயினியப்பபிள்ளை அவர்களும், தண்டபாணி தேசிகர் அவர்களும் கடவுள் வழிபாடு செய்யும் அவசியத்தையும் முறைமையையும் பற்றிப் பேசினார்கள். பஜனைசெய்து மக்கள் கூட்டமாக வலம்வர கூட்டம் முடிந்தது.

21—4—53 நடுவலூர் நட்சத்திர மாலையிலும், 22—4—53 ஓடக்கரை மணமேட்டிலும், 23—4—53 அபிஷேகக்கட்டளை பிச்சக்கட்டளை சேரியிலும், 28—4—53 திருமயானம் தெற்கு வடக்குச் சேரிகளிலும், 29—4—53 சங்கந்தியிலும், 30—4—53 பிள்ளைப்பெருமாநல்லூர், வேப்பஞ்சேரி, தலையாரித்தெருக்களிலும் மேற்குறித்த அன்பர்களும் மார்க்கண்டர் என்பவரும் பேசினார்கள். இந்த இடங்களில் கூட்டத்தை அமைத்துக் கொடுத்தும் பேசியும் பணிசெய்த அன்பர் நீஞ்சாங்குளத்தெரு நாட்டாண்மை ஆறுமுகத்துமகன் கலியபெருமாள்.

இவ்வாறு பிரசாரம் சேரிமக்களுக்குப் பயன் அளித்து வருவதால் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணைப்படியும், மக்களின் விருப்பத்திற்கு இணங்கவும் தொடர்ச்சியாக 1—5—53 முதல் 15நாளைக்குத் திட்டமிட்டுப் பிரசாரம், திருக்கடவூருக்கருகிலுள்ள பல சேரிகளில் நடைபெற்று வருகிறது.

229

மதிப்புரைகள்

பாவைப்பாட்டு

கோட்டையூர் திரு ரா. பெ. அழ. அழகப்பச்செட்டியார் அவர்கள் தமது அறுபதாம் ஆண்டு அன்பளிப்பாக இதனை வெளியிட்டு வழங்கியுள்ளார்கள். திருவெம்பாவையும் திருப்பாவையும் இதில் அடங்கியுள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் அவ்வவற்றிற்குப் பக்கத்தில் தெளிபொருள் எழுதப்பெற்றுள்ளது. சில இடங்களில் நயப்பொருளும், இலக்கணக் குறிப்பும், ஒப்புமைப்பகுதியும் குறிக்கப்பட்டுள்ளன. செந்தமிழ்ப் புலமை நிரம்பப்பெற்ற அன்பர் திரு. ராய. சொ. அவர்கள் எழுதிய நூன்முகத்தில் பாவைவிளக்கம், ஆசிரியர்களின் அருட்புலமை முதலிய பல அரியவிஷயங்கள் அடங்கியிருக்கின்றன. அவர்களது ஏனைய நூல்களைப்போல இதிலும் அவர்கள் யாப்பிலக்கணப் புலமைகொண்டு சில திருத்தங்களையும் தந்துள்ளார்கள். இனிப் படிப்பார் பிரித்தற்கு இடம் இல்லாதவாறு பாடல்களும், உரைநடைபோலவே மிக அழகாகப் பிரித்துத் தரப்பட்டுள்ளன. இறுதியில் பாட்டு அகராதியும் உள்ளது. பதிப்பழகும் குறிப்பிடத்தக்கது எல்லாவகையிலும் சிறந்துவிளங்கும் இந்நூலை அன்பர்கள் பெற்றுப் பயன் பெறுவார்களாக.

திருமுறைத் திரட்டு

ஸ்ரீ உமாபதிசிவாசாரிய சுவாமிகளால் திரட்டப்பெற்றது. அவர்கள் அருள்நூல்களுள் ஒன்றாகிய திருவருட்பயன் அதிகாரப் பாகுபாட்டை ஒட்டியே இது அமைந்துள்ளது. 99 திருப்பாடல்கள்கொண்டது. அண்ணாமலைநகர் வித்வான் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் கருத்துரை எழுதியுள்ளார்கள். வெளியிட அருள்பாலித்தவர்கள் பனசை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள்.

௨௭௭

திருவாசகம்—சிவபுராணம்

சித்தாந்தப்பேராசிரியர் திரு. சபா. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் தெளிவுரை எழுதியிருக்கின்றார்கள். இந்நூல் சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லச்செய்கின்றது. இந்த இரண்டு நூல்களும் தில்லைத் திருமுறைக் கழக வெளியீடுகள். மேற்படி கழகத் தலைவரும் சிவநலம் கெழுமிய பேரன்பருமாகிய திரு. ஆ சு. கணபதிப் பிள்ளை அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு நினைவாக வெளியிடப்பெற்றுள்ளது. தமது பொருட்செல்வத்தை அருட்செல்வமாக்கிய இவர்கள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமும் தனியே அச்சிடப் பெற்றுள்ளது. வேண்டுவோர் தில்லைத் திருமுறைக் கழகத்திற்கு எழுதிப் பெறுவார்களாக.

மக்கள் மன்ற மலர்

வாசகர்களுக்கு இம்மலர் நல்லமணத்தைக் கொடுக்கிறது. மணமும் பலதுறையில் வருகின்றது. சிறப்பாக வள்ளுவரின் குறள்மணம் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. தமிழன் யார்? என்ற கட்டுரை தமிழனுடைய தனிப்பண்பாட்டினைத் தெரிவிக்கின்றது. வ. உ. சி. வாழ்க்கைக் கப்பல் வாசகர்களின் மனக்கடலிலே பவனிவருகின்றது. பெண்கள் புரட்சியிலே புத்துலகம்; தஞ்சைமாவட்டக் குறிப்புக்கள்; மக்கட் பணி மன்றம்; திக்கெட்டும் பரவட்டும் திருக்குறள் என்பன போன்ற பல அருமையான கட்டுரைகள் சோம்பியிருக்கும் உள்ளங்களை வீறுபெற்றெழச்செய்கின்றன. அரசியல் அறிஞருடைய படங்கள் பல மலரை அலங்கரிக்கின்றன. வெள்ளிய காகிதம்; சிறந்த எழுத்துக்கள்; மலரின் அமைப்பு ஆகிய எல்லாத்துறையிலும் சிறந்து விளங்குகின்ற இம் மன்ற மலர் மக்கள் கையிலிருக்கவேண்டியது அவசியமாகும். விபரம் வேண்டுவோர் குடந்தை, 'தஞ்சைமணி' ஆசிரியர்க்கு எழுதுக.

नवमं चैव सिद्धान्ताधिकारो भवतोदितः।
तस्माद्दशविधा दीक्षा पशुपाशपतिक्रमात्॥
प्रथमं तत्वरूपं तु द्वितीयं तत्वदर्शनम्।
तृतीयं तत्वशुद्ध्यर्थं चतुर्थं चात्मरूपकम॥
पञ्चमं चात्मदृश्यं तु षष्ठं चाप्यात्मशोधनम।
सर्वतत्त्वं चतुर्भेदं मायाकुण्डलिनोद्भवम॥
पूर्वोक्तस्य स्वकर्तव्यं तत्त्वत्रयविशेषतः।
तत्वरूपमिदं तत्र तत्वदर्शनभावनम॥
तत्वशुद्धिः पृथग्भावं तत्वशून्यस्थितिं कुरु।
अरूपा वर्णचैतन्यमविकारान्तगोचरम॥
अभिन्नभिन्नरूपत्वं तत्वमात्मस्वरूपकम्।
अविकारोत्पन्नया तत्र प्रज्ञात्वं नाणुरूपकम्॥
तद्व्याप्तं चेतनारूपं तत्सर्वं सुप्रकाशितम्।
तद्व्योम सम्भवत्यर्थं तदवस्थात्मशोधनम्॥
रूपारूपं द्विधा शून्यं तुर्यातीतं परं शिवम्।
तत्त्वदं परमं स्थाणुं तत्वातीतं परं शिवम्॥

(अथ शिवदर्शनवविवेकः)

अणोरणीयान्महतो महीयान्
आत्मा गुहायां निहितोऽस्य जन्तोः।
उपाधिशून्यं स्वयमात्ममध्ये
प्रकाशते ज्ञप्तिपरानुभावः॥

स्वजीव परयोरैक्यं शिवयोगं शिवोद्भवम।
दशावस्थामतिक्रान्तं........मशनम्॥
स्वरूपसत्यादिगुणं वाक्यलक्षणशोधनम्।
सत्यानन्द महाज्योतिः शिवभोगानुभूतिकम्॥

என வருமாற்றான் உணர்க. முற்கூறியவாறே கழிந்த நவா வத்தையபிமானிகளாவர்.

ஒன்பா னவத்தையு மொன்பா னபிமானி
நன்பாற் பயிலு நவதத் துவமாதி
யொன்பா னனவத் துரியத்து ளிற்பர்
செம்பாற் சிவமாதல் சித்தாந்த சித்தியே. 2545

முத்துரி யத்து முறை...கண்டபின்
பத்தும் பிரமன் றிருமால் பகரிறை
சுத்தம கேசன சதாசிவன் றூல்விந்து
உய்த்திடு நாதஞ் சிவஞ்சத்தி யுண்மையே.

என வருமாற்றான் உணர்க. ஈண்டுச் சத்தியைப் பின் கூறிய வதனாற் பராசத்திக்கு மூலமான பரசிவனோடு கூடப் பத் தெனினுமாம். அது,

மேவும் பரசிவ மேற்சத்தி நாதமும்
மேவும் பரவிந்து வைம்முகன் வேறீசன்
மேவு முருத்திரன் மால்வேதா மேதினி
யாகும் படிபடைப் போனர னாமே. 2417

என வருமாற்றான் உணர்க. பா...மேல் வரும் பிரணவபேதங் குறித்து உபாதியாகலிற்......பரமென்னும் ....கினகீழா மென்க. இவ்வாறு சத்திபதங்களும்,

ஆதிபரா பரையாகும் பராசத்தி
பொதியின் ஞானந்தொழிலிச்சை ...நின்ற
பேதமதாம் விந்துநாதம் பெருங்கலை
யேதமில் ....தியியைந்தே.

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. இவ்வாறு ஞான சித்தியிலும்,

जीवावस्था परवस्था शिवावस्था नवान्तकम् ।
नवतत्वं नवावस्था नवावस्थान्तगः शिवः ॥
ब्रह्मा विष्णुश्च रुद्रश्च ईश्वरश्च सदाशिवः ।

परबिन्दुः परो नादः परा शक्तिः परः शिवः॥
नवतत्वलयस्थाने नृत्तानन्दमयो गुरुः।

எனவும்,

शिवः शक्तिर्द्विधानादबिन्दुः सादाख्यपञ्चमः।
ईशो रुद्रस्तथा विष्णुर्वेधाग्रं मूर्तयो नव॥
इच्छाज्ञानक्रियामाया पराबिन्दवतारकाः।
कुटिला कुण्डली भेदा नवप्रधानशक्तयः॥
नवं प्राधान्यमूर्तिश्च नवद्वै बन्धकारणम्।

எனவும் வருமாற்றான் உணர்க. ஈண்டுப் பிரதான சத்திகள் எனவே அவாந்தரபேதமூர்த்திகளளவில என்பதாம். அது ஞானசித்தியில்,

एतच्छक्तिमयं विश्वं विश्वातीतं परात्परम्।
शिवशक्ति द्विमध्यस्थे नादबिन्दुस्तथोदितम्॥
नादबिन्दुद्विमध्यस्थे पञ्चसादाख्यमुद्भवम्।
पञ्चसादाख्यमध्यस्थे अष्टविद्येश्वरोदितम्॥
अष्टविद्येश्वरमध्ये रुद्रभेदस्तथोदितम्।
रुद्रभेदस्वमध्यस्थे षट्कोटिविष्णुरुद्भवम्॥
षट्कोटिविष्णुमध्यस्थे शतकोटिब्रह्मणोद्भवम्।

என வருமாற்றான் உணர்க. அவ்வாறு சத்திபேதத்திலும் வருமாறு. அதிலேயே,

इच्छाज्ञानक्रियामध्ये नवशक्तिस्तदुद्भवम्।
इच्छाज्ञानक्रियामध्ये हृप्रभुमान्त्रिका॥
क्रियाशक्त्युद्भवं शेषं वाक्शक्तिः पञ्चमस्तथा।
परापरात्पराकारं शिवशक्तिस्तदुद्भवम्॥

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. இவ்வாறு நவா வத்தையபிமானி மூர்த்திகளுஞ் சத்திகளும் கழலவே எல்லாப்

பெந்தங்களுமே போமென்றதாயிற்று. அது,

नवं प्राधान्यमूर्तिश्च नवद्वैबन्धकारणम् ।

என்பதனுனும் விளங்கும். இதனுனேயன்றே சித்தாந்தத்திலும்,

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவந் திகழு மீசன்
உவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னென்றி னென்ருய்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்ருய்
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்.
(சித்தி, சுபக். 164.)

சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மணிதா னுகி
யொத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவா திக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகு
மெத்திறம் நின்ரு னீச னத்திற மவளு நிற்பள். (ஷை 165.)

என வருவதூஉம். இந்த நவமூர்த்திகளேயே முன்னர்,

தொற்பத விசுவன் றைசதன் பிராஞ்ஞன்
நற்பத விராட்டன்பொன் கர்ப்பனவ் வியாகிருதன்
பிற்பதஞ் சிற்சொலிதை பிரசாபத்தியன்
பொற்புவி சாந்தன் பொருதபி மானியே. 2537

......படி ...... வனறை சன் எனக்கூறியதூஉம். இனிச் சீவபரசிவமென்னு மூன்ற... சதாசிவமென்பாருமுளர்.

தன்னைப் பரனைச் சதாசிவ னென்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
யுன்னத் தகுஞ்சுத்த சைவ ருபாயமே. 1432

என வருதலின். இனி ஞானசித்தியில்,

असिपदं शिवरूपं द्वयोरैक्यं प्रकाशितम् ।

என வந்தவாறே. சூதசங்கிதையில்,

जीवेश्वरत्वरहितः समः केवलः स्वप्रभः शिवः।

என வருதலின்.

जीवेश्वरत्वादिकल्पनारहितः केवलोऽद्वितीयः स्वप्रभः स्वयंप्रकाशचैतन्यरूपः शिवः कूटस्थः எனக் கூடஸ்ததீபிகையிற் கூறியதுங் கண்டுகொள்க. இதனாற் கூடஸ்தத்துவம் உபாதியாகலின் மேற் சுவரூப பிரகாசமான குருவடிவே யாதார்த்திகமென்றுந் தோன்றியவாறு, மாயாவாதிகளிவ்வாறு கூறிச் சீவசாட்சிக்கு மீசுவரசாட்சிக்குமே ஐக்கியம் கூறுதலுமுளதாகலின். இவ்வாறு வரு மகாவாக்கியத்தைத் தூலப் பிரணவமென்றது ஞானசித்தியில்,

अकारोकारमकारश्च शिरसि प्रणवस्य तु।
शिवजीवपरैरैक्यं स्यात् त्रिपदीलक्ष्यलक्षणा॥
शबला परितं भेदं तन्मध्ये ...द्धरोत्तमम्।
जीवः परः शिवो मुक्तिस्तद् व्याप्यस्तस्य लक्षणम्॥

என வந்தவாறே திருமந்திரத்திலும்,

அகார முயிரே யுகாரம் பரமே
மகாரஞ் சிவமாய் வருமுப் பதத்து
சிகாரஞ் சிவமே வகாரம் பரமே
யகார முயிரென் றறையலு மாமே. 2503

என வருமாற்றானுணர்க. ஈண்டுச் சுத்த பஞ்சாக்கரமும் தத்துவமசிவாக்கியமாம் என்பது,

तत्पदं तु शिकारं स्याद्वाकारं त्वंपदं तथा।
असिशब्दो यकारश्च महावाक्यस्वरूपकम्॥

என்னுமாகமத்தாலுணர்க. இதனானே அனைத்திற்கும் பிரவண மூலமென்றுமாம். அது திருமந்திரத்தில்,

ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்க
ளோங்காரத் துள்ளே யுதித்த சராசர
மோங்காரத் துள்ளே யுயிர்மூன்று முற்றன
வோங்காரஞ் சிவன் பரசிவ ரூபமே. 2677

என வருமாற்றானுணர்க. ஈண்டு உயிர் மூன்றென்றமையிற் சகலர்க்கு மும்மலமுளவாகலின், அவர்கள் மாயேய நீங்குமளவிற் பிரளயாகலராயும் கன்ம மாயையு நீங்குமளவில் விஞ்ஞானகலராயும்...வருதலின் மூவகை யுயிரிலக்கணமுந் தோன்றுமாற்றான் மற்றைப் பிரளயாகலர் விஞ்ஞானகலர்க்குஞ் சிவனருளுமுறை யறிந்தருளுதல் கண்டுகொள்க. அது,

தொந்தத் தசிமூன்றிற் றொல்கா மியமாதி
தொந்தத் தசிமூன்றிற் றொல்தா மதமாதி
வந்த மலங்குண மாளச் சிவன்தோன்றல்
இந்துவின் முன்னிரு ளேகுத லொப்பே. 2489

என வருமாற்றான் உணர்க. பிறவும் விரித்துக்கொள்க. 50

51. * * *

வருமிந்த வவத்தைகளிற் றுரியம் என்பது துரியத்தியல்பு கூறுமுகத்தாற் றாலப் பிரணவாவத்தை முடிவுகூறி ... ... சொரூபமடியாய மேற்குறித்த வோங்காரத்தியல்பு சொல்லத் தோற்றுவாய் செய்கின்றது. துரியத்தைப் பாழென்பது,

மத்தமாம் புலன்மாறிய விடத்தேம்.........
வெளிப்படுமொருபாழ்
பெத்தமா முயிர் மாறியவிடத்தே மூலநற்
சிவம் வெளிப்படுமொருபாழ்
முத்தமாம் பரமாறிய விடத்தே மூலநற்
சிவம் வெளிப்படுமொருபாழ்
சித்தமாஞ் சிவமாத ... ...
தலைப்படுஞ் சிவப்பிரகாசம்.

எனவும், ஞானசித்தியிலும்,

आत्मा परःशिवश्चैते त्रिपदार्थास्त्रिचेतनाः ।
त्रिशूल्योदयसम्भिन्ने - त्वं तदसीतिसम्भवम् ॥

எனவும் வருமாற்ருன் உணர்க. இவ்வாறு வருந் தசாவத்தையிற் சர்வபாசங்களும் ஒழிதலின் ஆன்மாச் சுத்தனுவன்.

......कादि मलत्रेधामस्याभिगुणत्रयः ।
त्वं तदस्येति तन्मध्ये मोचनं शुद्धमात्मनः ॥

என முற்கூறியவாறே ஞானசித்தியிலும் வருதலின். இவ்வாறு நிகழுந் தூலப் பிரணவாவத்தையன்றி மேலுஞ் சூக்கும வோங்காராதி அனுட்டானங் கூறுவதென்னையோ எனின் வாசனையாயெல்லா மலங்களு மிருத்தலின் அந்த ஆணவமல சம்பந்தியாயப...ருணவமலகளு நீங்காதிருக்குமாகலிற் பின்னுமனுட்டானம் பண்ணவேண்டுதலினவையும் வேண்டுமென்க. இது முன்னும் கூறினும் மேலும் விளங்கும். 51

52. * * *

பகர் சொரூபத்துயர் என்பது சொச்சொரூபத்தியல்பு கூறுமுகத்தாற் சூக்கும வோங்காரத்தியல்பு சொல்லுதுமென்கின்றது. ஈண்டுப் பகர் சொரூபமென்றது முன்னுண்மையென்னும் குரு சுவரூபமான சிவபோகமாவது, பரிபூரண சித்தியில்,

அப்படி யிருந்து நீயங் கனுபவித் தானந் தித்த
வொப்பறு சத்தி யென்னும் பேருடை யுபசாந் தத்தைத்
துப்பற விழுங்கு மந்தத் துரியமாஞ் சொயம்பிர காசங்
கப்பற வளிப்பன் மைந்தா கண்டுகொள் கருதி யென்ருன்.

மத்துறு தயிரென மறுகி யுள்ளுடைந்
தெய்திட லறவெனை யாண்ட வெந்தையே
சத்திய துரியமென் சயம் பிரகாசமா
மத்தம தடியனுக் கருள வேண்டுமே.

அத்திறம் வேதம கண்ட மகண்ட மாமொழியா
லவனிவனென்னுமது திகழ
வொத்தெழுநீல ... மணமுருச் சோபை
யுற்பல மெனவொருதனிலே
சத்தியஞான வநந்த வாநந்தந்
தயங்கிய சயம்பிரகாச
வித்திற மாகுமென விறைமௌந மொழியினு
லியம்பிவீற்றிருந்தான்.

எனவும் நிராமயதேவர் நூலின்,

யாவையுஞ் சிவமே யாதி யல்லவா மானந் தத்து
மேவுசை தன்னியந்தான் மிகுதரு சொரூவமாகும்
ஓவினமூன் றும்பதத்தா லுறுதரு சொரூவ மோதி
லாவயிற் சத்தி சத்திய ஞானவா னந்தமா மால்.

சத்திய மான்ம ஞானந் தற்பர ரூபந்தான
மெத்திடு மனந்த மந்தச் சிவன் மிகும் தன்பாலந்தத்
துய்த்த வானந்தசத் தியோதிவை சொரூபரூப
மெத்திடுங் குணம் விபூதி யிவற்றினுல் விளங்குமன்றே.

கூறிய சொரூபமாதி நான்குடன் குறிக்குங்காலே
தேறிய நிறமே கந்தஞ் சேர்த்திடுஞ் சோபைநான்கு
மாறிலா நிலவு ... திடையிலையுமா போற்
கூறிய நான்கு மேலேச் சொருபமே கவர்ந்துகொள்ளும்.

செய்திடு மிதனுற் சீர் ... ...
... சிவன்மிக்க பரசிவம் மேலேச்
சத்தியுய்தரு நான்கு மேலேச் செ ...
ததினுடலதானுலே மெங்குந் தானே
சொரூபமாயிரு ... ... லகா.

எனவும் பிறவும் வருமாற்றுன் உணர்க. இவ்வாறு திருமந்திரத்திலும்,

சொரூப முருவங் குணந்தொல் விபூதி
யரியன வுற்பலத் தாமாறு போல
மருவிய சத்தியாதி நான்கு மதித்த
சொரூபத்திரு நந்தி சொல்லிறந் தானே. 2843

3084

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-ஞு வைகாசி-மீ 1-உ முதல் 31-உ முடிய)

(13—5—53 முதல் 13—6—53 முடிய)

---

1. **மேஷம்**, அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி 1. 2. 3. பாதங்களும் பரணி 1. 2. பாதங்களும் கார்த்திகைமுதல் பாதமும் மங்களமானபலனைத் தரும். உத்தியோகலாபம், காரியசித்தி, கீர்த்திபத்திரம்கிடைத்தல், நூதன வியாபாரவிருத்தி, கட்டட வேலைகள், க்ஷேத்திராடனம், பெரியோர்கள்தரிசனம் இவைகள் கிட்டும். மற்றபாதங்களுக்கு அலச்சலுடன் காரியசித்தியும், லாபமும், ஜயமும், மங்கள காரியங்களும் நடக்கும். புதன் வியாழன் சுபம் தரும்.

2. **விருஷபம்**, கார்த்திகை, ¾ ரோஹிணி, மிருகசீரிஷம். ½

ஷை நக்ஷத்திரபாதங்கள் பூராவுமே சுபமாகும். முதல் பாதத்தில் சகல சித்திகளும் சந்தோஷமும் ஏற்படும். பிற்பாதியில் அதிக செலவுகளும், மனக்கவலையும், பெரியோர் வருத்தமும், தேவகோபமும், தொழில்மந்தமும், நம்பினவர் மோசம் செய்தலும் ஏற்படும். ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். வெள்ளி சுபமாகும்.

3. **மிதுனம்**, மிருகசீரிஷம், ½ திருவாதிரை, புனர்பூசம். ¾

ஷை நக்ஷத்திரபலன்கள் சுபமேதரும்; ஆனாலும் மத்தியில் வியாதிபீடையும், குடும்பத் தொல்லைகளும், ரிணபாதையும் தந்து சுகத்தைக்காட்டும். மங்களகாரியங்கள் மூலம் விசேஷ

செலவுகளும் கீர்த்தியும் கிரயவிக்ரயமூலம் லாபங்களும் வியவகார வெற்றியும், உத்தியோகலாபமும், மேன்மையும் உண்டாகும். சனி புதன் சுபவாரமாகும்.

4. **கடகம்,** புனர்பூசம், $\frac{1}{4}$ பூசம், ஆயில்யம்.

இந்த ராசிப்பலன் சென்றமாதம்போலவே இருக்கும். விசேஷமாக எதிர்பாராத பந்து மித்ராளுடைய சேர்க்கையும், சில தாவர ஜங்கம சொத்து மாறுதலும், சத்ரு நாசமும், இல்லற சுகமும் ஏற்படும். பூசத்துக்கு மாத்திரம் சௌகரியமிருந்தாலும் சதா மனத்தாங்கலையும் துஷ்டர்களால் வஞ்சிக்கப்படுதலையும் செய்யும். சனி புதன் சுபவாரமாகும்.

5. **ஸிம்மம்,** மகம், பூரம், உத்திரம். $\frac{1}{4}$

மகர நக்ஷத்திரக்காரர் இம்மாதம் விசேஷ சௌக்கியத்தையும் ஜயத்தையும் லாபத்தையும் போகத்தையும் அடைவார்கள். மற்ற இரு நக்ஷத்திரபலனும் கெடுதலைக் கொடுக்கும். நஷ்டம் ஏற்படல், இடறிவிழுதல், விவஹாரகஷ்டம், துக்க சமாசாரக் கேள்வி, இடம்மாறல், காலிகன்று குறைவு, வாஹனநஷ்டம் நாஸ்தீகர்களின் சேர்க்கை, அபவாதம் இவைகள் உண்டாகும். சுக்கிரவாரம் சுபம் தரும்.

6. **கன்னி,** உத்திரம், $\frac{3}{4}$ ஹஸ்தம், சித்திரை. $\frac{1}{2}$

ஹஸ்தநக்ஷத்திர பலன் நூதனமுறைகளைக் கண்டுபிடிப்பதில் முயற்சி அதிகமாகும். சதா அலைச்சல் ஏற்படும், உஷ்ண பீடை காட்டும், தெய்வசக்தி ஓங்கும். நஷ்டதனங்கள் சேரும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். உபகாரத்தன்மை ஏற்படும். வியாபார விருத்தியும், பெரியோர் நேசமும் ஏற்படும். மாதக் கடைசி 10 தினங்களில் நூதன சிநேகமுள்ள பிரபுக்களின் வருத்தமுண்டாகுதலும், காரிய விக்னமும், ஆத்ம நண்பனுக்கு ஆபத்தும் ஏற்பட்டுக் கவலைதரும். மற்ற இரு நக்ஷத்திரக்காரர்

களும் மிசிர பலனே அடைவார்கள், வரவும் செலவும் சமமாகும். புதன்கிழமை நன்மை தரும்.

7. **துலாம்**, சித்திரை, ½ சுவாதி, விசாகம். ¾

விசாக நக்ஷத்திர பலன்தான் ஆபத்தையும் நஷ்டத்தையும் சத்துரு பாதையையும் அப ஜயத்தையும் தரும், உலகில் அபவாதம் ஏற்பட்டு, பெரிய வியவஹாரம் உண்டாகும். கடன் விருத்தியாகும். தொழில் நஷ்டமடையும். மற்ற இருநக்ஷத்திர பலனும் சுபத்தையும், தனலாபத்தையும், உத்தியோக மேன்மையையும், கீர்த்தியையும், தெய்வபலத்தையும் தரும். அசாத்தியமெல்லாம் சுபமாகும். புதன் சனி திங்கள் சுபவாரமாகும்.

8. **விருச்சிகம்**, விசாகம், ¼ அனுஷம், கேட்டை.

இம் மூன்று நக்ஷத்திரபலனும் மிசிரமமாகவே நடக்கும். லாபநஷ்டம் சுகதுக்கம் எல்லாம் ஸமன். ஸ்தாவர ஜங்கமங்கள் மாறும். இடம் மாறும். மேலோர் அன்பும் உண்டாகும். சதா தெய்வசக்தி தோன்றும். தெய்வபலத்தால் சுபம் கிட்டும். ஞாயிறும் சனியும் சுபவாரமாகும்.

9. **தனுசு**, மூலம், பூராடம், உத்திராடம். ¼

மூலம் பூராட பலன். அதிக சிரமத்தின்பேரில் நன்மை தரும். சுபசோபனுதிகள் ஏற்படும். தூரயாத்திரை க்ஷேத்திராடனம், பந்துமித்திர சேர்க்கை, உபகாரத்தன்மை, பெரியோர் ஆசி முதலிய சுபங்கள் ஏற்படும். உத்திராடக்காலுக்கு தனிமையாய் கஷ்டப்படும்படியும் சரீர ஆயாஸமும் அதிகச் செலவுகளும் ஏற்படும். எல்லோருக்குமே நடுப்பகுதி பத்து தினங்கள் மிகுந்த கவலை காட்டும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

சிரவணமும் அவிட்டமும் சந்தோஷபலனையே தரும். ஜயம் கிட்டும். கீர்த்திபத்திரம் கிடைக்கும், தெய்வபலம் ஓங்கும். தொழில் ஓங்கும். எதிர்பாராதவைகள் எல்லாம் தானே சுலபமாய் சாதிக்க நேரும். வரக்கூடாத மனுஷ்யாள் எல்லாம் காத்திருக்கும்படி செய்யும். தெய்வ சக்தி பிரகாசிக்கும். உத்திராடத்துக்கு மிசிரபலனைத் தரும். ஞாயிறு திங்கள் நலன் காட்டும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

ஷை நக்ஷத்திரங்கள் பூராவுமே சுபம் தராது. பூரட்டாதிக்கு மாத்திரம் காமபோக சுகங்கள் கிட்டும். நூதனவஸ்த்திராபரணங்கள் சேரும். அவிட்டம் சதய நக்ஷத்திரம் கூடியவர்கள் மிகுந்த ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். எதிர்பாராத கவலைகளும் நஷ்டங்களும் உண்டாகும். சதா சிவஸ்மரணை செய்து வரவேண்டும் சனி ஞாயிறு சுபமாகும்.

12. மீனம். பூரட்டர்தி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

உத்திரட்டாதி ரேவதி நக்ஷத்திரக்காரர்கள் மிகுந்த சந்தோஷமடைவார்கள்; என்றாலும் சாதிக்க முடியாததை எல்லாம் சாதிப்பார்கள். தனவிருத்தியும் லாபமும் ஏற்படும். தொழில் ஓங்கும். சகாயம் கிட்டும். வியவகாரம் ஜயிக்கும். சத்துரு சரணடைவார்கள். பூரட்டாதிக்கு மிசிரபலன் தரும். புதன் வெள்ளி சுபம் தரும்.

ஆச்சாபுரத்தில் பிரமோத்ஸவம்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான ஆச்சாபுரம் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மை சமேத ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி ஆலயத்தில் 18—5—53 திங்கட்கிழமை தொடங்கி பிரமோத்ஸவம் நடைபெறும். 22—5—53-ல் இடபவாகனக்காட்சி; 25—5—53ல் திருக்கல்யாணம்: 26—5—53-ல் திருத்தேர்; 30—5—53 அன்று இரவு ஸ்ரீ தோத்திரபூர்ணாம்பிகா சமேத ஸ்ரீ திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருக்கல்யாண வைபவமும் ஐக்கியமும் நிகழும். அன்பர்கள் தரிசித்து இன்புறுவார்களாக.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள்செய்வித்து அவ்வத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 27—4—53 அன்று திருப்பாம்புரம் ஸ்ரீ பாம்புரேஸ்வர சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப் பதிகம் அடங்கிய வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 69-ம் ஆண்டு நிறைவு விழா

விழா மேமீ 23, 24-ம் நாட்களில் நடைபெறும். மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் திருப்புறம்பயம் கட்டளைவிசாரணை ஸ்ரீ மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் விழாப்பேரவைக்குத் தலைமை தாங்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். திருவாளர்கள் ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள், கே. ஆறுமுக நாவலரவர்கள், வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள், திருமதி சி. பிருந்தாதேவியாரவர்கள் முதலானோர் சொற்பொழிவாற்றுவார்கள். சபையைச்சார்ந்த பாகம்பிரியாள் மாதர் கழக ஆண்டுநிறைவு விழாவும் திருமதி சி. பிருந்தா தேவியாரவர்கள் தலைமையில் 25உ நடைபெறும். விபரமான நிகழ்ச்சி நிரல் அமைச்சர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உ
குருபாதம்

சிவஞானசித்தியார் பாட வகுப்பு

[18—5—53 முதல் 28—5—53 வரை]

தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் குருபூஜை விழாவை முன்னிட்டு நிகழும் விஜய ஆண்டு வைகாசித் திங்கள் 5-ம் நாள் திங்கட்கிழமைமுதல் பத்து நாட்கள் சிவஞான சித்தியார் பாடவகுப்பு முறையே நடைபெறும்.

புலவர், வித்துவான், பி. ஏ., எம். ஏ. பட்டதாரிகளும் வகுப்பிற்சேர்ந்து பயிலலாம். விண்ணப்பங்கள் 12—5—53க்குள் வந்துசேர வேண்டும்.

ஆணையின்வண்ணம்

தருமபுரம் 7—5—53.

K. S. ராமையா முதலியார்,
மானேஜர்.

குறிப்பு:- பயில வருபவர்க்கு இலவச உணவும், உறையுளும் அளிக்கப்பெறும். சித்தாந்த சாத்திரம் (14-ன்) உரையும், படுக்கை முதலியனவும் அவரவர்களே கொண்டுவருதல் வேண்டும்.

Prntied & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram) 9—5—1953